AHARAM
# அகரம்
எண்: 11 எழுத்து: 01 ஜனவரி - 2017 | ரபீஉல் ஆகிர் 1438



## இது வெற்றிக்கான வருடம்!!

இனி வரும் நாட்கள்
வெற்றிக்கான
தருணங்கள்;
தவறாது அவற்றை
பயன்படுத்துவோம்

50/-


மாதாந்த சிறுவர் சஞ்சிகை

www.aharam.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்கணித எண்ணக்கருக்கள்

முன்பள்ளி மாணவர்களுக்கானது




**விலை: ரூபா 350 மட்டுமே**

- பாடசாலையில்கணித பாடத்தை சிரமமின்றிக் கற்க
- கணிதக் கல்விக்குச் சிறந்த அத்திவாரம் இடக்கூடியவாறு
- பிள்ளைகளின் வயது முதிர்ச்சிக்கேற்ப
- விஞ்ஞான முறைப்படி
- இத்துறையில் அனுபவம் மிக்கவர்களால்
- பிள்ளைகளைக் கவரக்கூடிய நிறங்களில் தயாரிக்கப்பட்ட பயிற்சிப் புத்தகம்.

தொடர்புகளுக்கு: 0773171722

Insight Institute of Management and Technology
78, Allen Avenue, Dehiwala.
www.insightedu.lk e-mail: insight.centre@gmail.com

INSIGHT

# National Diploma

வதிவிட வசதியுடன் கூடிய ஒரு வருட முழு நேர

## தேசிய டிப்ளோமா பாடநெறி



**After A/L**

## Early Childhood Care and Development



(Approved by the Children's Secreteriat,
Ministry of Child Development and Women's Affairs)
Reg. No.: ECCD NC/CS/044

**Insight School of Education**
**Mawanella**

| | |
|---|---|
| அடிப்படைத் தகமை | : G. C. E. A/L பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி |
| வயதெல்லை | : 19 - 35 வரை |
| காலம் | : ஒரு வருடம் (9 மாதங்கள் கல்லூரியில் உள்ளக பயிற்சி 3 மாதங்கள் வெளிக்களப் பயிற்சி) |
| பாடநெறி ஆரம்பம் | : February 2017 |

புலமைப்பரிசில் வசதிகள் உண்டு


மேலதிக விபரங்களுக்கு
Preschool என்று Type செய்து 0773171722 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பவும்

**Insight Institute of Management and Technology**
78, Allen Avenue, Dehiwala. www.insightedu.lk e-mail: insight.centre@gmail.com

INSIGHT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06



இலங்கையில் 18 வகையான தேள் இனங்கள் காணப்படுவதாகவும் அவற்றில் 14 வகையான தேள் இனங்கள் இந்நாட்டுக்கே உரித்தானவை எனவும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

22



24



38



32




# AHARAM அகரம்

எண்: 11 - ஜனவரி : 2017 - எழுத்து: 01






ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர்

## ஆலோசனைக் குழு

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

துணை ஆசிரியர்
வ. முஹம்மத் நபீல்

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்


## பாடத்திட்டம்


| | |
|---|---|
| தகவல் தொடர்பாடல் | 30 |
| அரபு மொழி | 14 |
| வரலாறு | 20 |





36


தொடர்புகளுக்கு:

அகரம்
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை
கொழும்பு 00900
தொ.பே : 077 741 2561
பெக்ஸ் : 011 268 6030
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com



சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுடன் ஆசிரியர்...

புதிய வருடமொன்று புன்னகையுடன் பிறந்திருக்கின்றது. புதிய பாடநூல்கள், புதிய பாடத் திட்டம், புதிய வகுப்பறை என எல்லாமே புதிது புதிதாக எம்மைச் சூழ பூத்திருக்கின்றன. எமக்கான புதிய திட்டங்களையும் இவ்வருடத்திற்காக வடிவமைத்துக் கொள்வோம்.

எமது கல்வி, எமக்கும் அல்லாஹ்விற்கும் உள்ள தொடர்புகள், எமது ஆற்றல், எமது பண்பாடு எமது உடல், உள, சமூக, சுகாதாரம் என...

எமது வாழ்வின் முக்கிய ஐம்பெரும் துறைகளை தனித் தனியாக அடையாளப்படுத்தி, அவற்றிற்கென தனித் தனி திட்டமிடல்களை மேற்கொண்டு, இடையறாது முயற்சிப்பதன் ஊடாக எமது வாழ்வை அழகானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் எம்மால் மாற்றிக் கொள்ள முடியும்.

ஒருபோதும் வாய்ப்புக்கள் தம்மை பயன்படுத்திக் கொள்ளுமாறு நமது கால்களைப் பிடித்து கெஞ்சப் போவதில்லை. புத்திசாலிகள் வாய்ப்புக்களை தேடிச் சென்று பயன்படுத்திக் கொள்கின்றார்கள் அல்லது தமக்கான வாய்ப்புக்களை தாமே உருவாக்கிக் கொள்கின்றார்கள். ஆனால், ஒருபோதும் தமது தோல்விக்கும் பின்னடைவுக்கும் அடுத்தவர்களை குற்றம் சாட்டிக் கொண்டு நிற்பதில்லை.

வாழ்க்கை என்பது வாய்ப்புக்களின் வைர சுரங்கமாகும். சந்தர்ப்பங்களை சாதனைகளாக மாற்றியவர்களை சரித்திரம் இன்னும் மறக்காமல் போற்றிக் கொண்டிக்கிறது. அத்தகைய ஒரு சாதனையாளராக இவ்வருடத்தில் உங்களையே ஏன் நீங்கள் மாற்றிக் கொள்ளக் கூடாது?

அழுக்கு மூட்டைகளை செல்வமென்று போற்றிக் கொண்டும் ஆயுதங்களை அநாவசிய சுமையென்று புலம்பிக் கொண்டும் இருப்பவனால் ஒரு போதும் தனக்கோ, தன்னைச் சூழ உள்ளவர்களுக்கோ எந்தவொரு பயனையும் வழங்க முடியாது.

ஆகவே, உங்கள் பலங்களை இனங்கண்டு அவற்றை பலப்படுத்தவும் பலவீனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் இவ்வருடத்தை பயன்படுத்துங்கள். உங்களை நீங்களே உற்சாகப்படுத்துங்கள். உங்களை வெற்றியின் பால் இட்டுச் செல்லக் கூடிய நல்ல பழக்கவழக்கங்களுக்கு சிறகுகளை பரிசளியுங்கள். உங்களை அழித்து நாசப்படுத்தக் கூடிய துர்க்குணங்களை வேருடன் கிள்ளி எறியுங்கள்.

ஒரு முஃமினின் இரண்டு நாள் ஒன்றுபோல இருக்காது என தன் வாழ்வில் முன்னேற்றமடையாதவனை அண்ணலார் இகழ்ந்திருக்கிறார்கள். ஆனால், ஒன்றுபோல எந்தவித மாற்றமும் இன்றி நமது இரண்டு வருடங்கள் இருந்துவிட்டால் அதைவிட பெரிய நஷ்டம் ஏது?

இந்த வருடத்தினை உங்களை நீங்களே செதுக்கிக் கொள்ள அர்ப்பணியுங்கள். நீங்கள் கனாக் காணும் இலக்கிற்கு தகுதியுடையவராக உங்களை வடிவமைத்துக் கொள்ளுங்கள். எமது எதிர்காலம் வர்ணம் கொண்டதாக அமைய வேண்டும் என்றால் இன்று வியர்வை சிந்துவதிலோ, விழித்திருப்பதிலோ தவறில்லை. துல்லியமான திட்டமிடல், அர்த்தமுள்ள தியாகங்கள், விடாமுயற்சி இவை மூன்றும் ஒன்றுசேர அமைந்தால் எந்த சிகரத்தையும் எட்டிப் பிடித்து விடலாம்.

***இது சாதனைக்கான வருடம்
சரித்திரத்தில் உங்கள் பெயரைப் பொறிக்க
நீங்கள் தயாரா?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

ஹுதைபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இரவில் தூங்குமிடத்துக்கு வந்தால், தன் கன்னத்தின் கீழ் கையை வைப்பார்கள். பின்பு 'அல்லாஹும்ம பிஸ்மிக அமூத்து வஅஹ்யா' (இறைவா! உன் திருப் பெயரைக் கொண்டே தூங்குகிறேன்; உன் திருப் பெயரைக் கொண்டே விழிப்பேன்) என்று கூறித் தூங்குவார்கள். விழித்துக் கொண்டால் 'அல்ஹம்துலில்லாஹில்லதீ அஹ்யானா பஃதமா அமாதனா வஇலைஹின் நுஸூர்' (எங்களை தூங்கச் செய்த பின் எங்களை விழிக்கச் செய்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்; அவனிடமே திரும்புதல் உள்ளது) என ஓதிக் கொள்வார்கள்.'' (ஸஹீஹுல் புகாரி)

இஸ்லாம் மனித சமூகத்துக்கு காட்டித் தந்துள்ள அழகிய ஒழுக்க விழுமியங்களுள் ஒன்றான தூங்கும் முறை தொடர்பாக விளக்கும் ஒரு ஹதீஸையே நாம் இங்கு நோக்குகின்றோம்.

தூக்கம் என்பது மனிதனுக்கு அல்லாஹ் வழங்கியிருக்கின்ற மிகப் பெரும் அருளாகும். பகல் வேளையில் உழைத்துக் களைத்த மனிதன் இரவில் தூக்கத்தின் ஊடாக ஆறுதலை அடைகின்றான்.

தூக்கம் மனிதனது ஆறுதலாக மாத்திரமன்றி அவனது உடல் சார்ந்த பல நோய்களுக்கு நிவாரணமாகவும் அமைந்துள்ளது. நாளாந்தம் போதியளவு தூக்கத்தை மேற்கொண்டு வருகின்ற மனிதனது மூளையின் செயற்பாடு வேகமடைவதுடன் அவனது நினைவாற்றல் வளர்ச்சி பெறவும் அது உதவுகின்றது.

இத்தகைய தூக்கத்தை எமது முன்மாதிரியான அல்லாஹ்வின் தூதரவர்கள் எவ்வாறு அமைத்துக் கொள்ளுமாறு வழிகாட்டியிருக்கிறார்கள் என்பதை நாம் அறிய வேண்டியது அவசியம்.

அந்த வகையில் நபியவர்கள் தூக்கத்திற்கு தயாராகிவிட்டால் முதலில் தொழுகைக்காக வுழூச் செய்வது போன்று வுழூச் செய்து கொள்ளுமாறு பணித்துள்ளார்கள்.

நபியவர்கள் தன்னிடத்தில் கூறியதாக பராஃ பின் ஆஷிப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள்: ''**நீ படுக்கைக்குச் செல்லும்போது தொழுகைக்காக வுழூ செய்வது போன்று வுழூ செய்து கொள்.**'' (புகாரி, முஸ்லிம்)

அடுத்து படுக்கை விரிப்பை சுத்தப்படுத்திக் கொள்தல். ''**நீங்கள் படுக்கைக்குச் சென்றால் உங்கள் ஆடையின் ஓரத்தைக் கொண்டு மூன்று தடவைகள் படுக்கை விரிப்பைத் தட்டி விடுங்கள்.**'' (ஸஹீஹுல் புகாரி)

இவ்வாறு செய்து கொள்வதன் மூலமாக படுக்கை விரிப்புக்குள் மறைந்திருக்கும் பூச்சிகள், விஷ ஜந்துக்களின் தீங்குகளில் இருந்து பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

அதனைத் தொடர்ந்து ஆயத்துல் குர்ஸிய்யு மற்றும் சூறத்துல் பகராவின் கடைசி இரு வசனங்களை ஓதிக் கொள்தல். ''**நீங்கள் தூக்கத்திற்குச் செல்லும்போது, ஆயத்துல் குர்ஸியை ஓதுங்கள். உங்களுடன் ஒரு பாதுகாவலர் இருந்து கொண்டேயிருப்பார். காலை நேரம் வரை ஷைத்தான் உங்களை நெருங்க மாட்டான்.**'' (ஸஹீஹுல் புகாரி)

தொடர்ந்து குல் சூறாக்கள் என அழைக்கப்படும் அல்குர்ஆனில் காணப்படுகின்ற இறுதி மூன்று சூறாக்களையும் ஓதுதல். இவற்றுக்குப் பின்னர் பல துஆக்களை ஓதுவதற்கு நபியவர்கள் எமக்குக் கற்றுத் தந்துள்ளார்கள். இந்த துஆக்களின் பின்னர் கையை கன்னத்தில் வைத்து அழகிய முறையில் தூங்கிக் கொள்வது நபி வழியாகும்.

தூக்கம் என்பது சிறு மரணமாக இருக்கின்றது. இத்தூக்கத்தை ஏனைய செயற்பாடுகள் போன்று அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு நாம் ஆரம்பிக்கின்றபோது எமக்கு அல்லாஹ்விடமிருந்து நன்மை ஏற்படுகின்றது. இல்லையேல், அல்லாஹ்விடமிருந்து இழப்பு ஏற்படுகின்றது என்பது நபி மொழியாகும்.

தூங்கும் முன் ஓதுவதற்கு நபியவர்கள் கற்றுத் தந்துள்ள துஆக்களுள் மிகச் சிறியதொரு துஆவினையே நாம் விளக்கத்துக்கு எடுத்துக் கொண்ட ஹதீஸில் காண்கின்றோம்.

மேற்படி துஆவை எமது சிறு பராயத்திலேயே நாம் மனனமிட்டுள்ளோம். எனினும், பொடுபோக்கின் காரணமாக பலர் இதனை ஓதிக் கொள்வதில் அலட்சியமாக இருந்து விடுகின்றோம். இது எம்மை ஷைத்தான் மிக இலகுவாக நெருங்குவதற்கு வழியேற்படுத்தி விடுகின்றது.

இங்கு தூக்கத்தின் சில ஒழுங்குகளே குறித்துக் காட்டப்பட்டுள்ளன. எனவே, இந்த ஒழுங்குகளை கடைப்பிடிக்க முயற்சிப்போம். இவ்வொழுங்குகளை நாம் கடைப்பிடித்து தூங்குகின்றபோது அடுத்த நாள் தூக்கத்திலிருந்து உற்சாகமாக விழித்தெழும் உணர்வை அல்லாஹ் ஏற்படுத்துகின்றான். இன்னும் சில ஒழுங்குகளை இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குர்ஆனிய களஞ்சியம்

ஆங்கிலத்தில்: ஸனீயாஸ்னைன் கான் (இந்தியா)
தமிழில்: ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம்

தொடர் 18

# அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள மிருகங்களும் பறவைகளும் (பகுதி 1)



செம்மறி ஆடு

ஆடை, அணிகலன் செய்வதற்குப் பொருத்தமான தோல், உரோமம் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளவும் இறைச்சி, பால் ஆகிய உணவு பெறும் நோக்கத்திற்காகவும் செம்மறி ஆடுகள் பண்ணைகளில் மனிதர்களால் வளர்க்கப்படுகின்றன. செம்மறி ஆடு புனித அல்குர்ஆனில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விலங்காகும். தம்மிடமுள்ள செம்மறி ஆடுகள் தொடர்பில் சண்டையிட்டுக் கொண்டிருந்த இருவருக்கிடையில் நீதம் செலுத்திய தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் பற்றி ஸூரா சாத் எடுத்தியம்புகிறது. அதிலொருவர் 99 ஆடுகளை தன்வசம் வைத்திருந்தும் மற்றவரிடமிருந்த ஒரேயோர் ஆட்டையும் அபகரிக்கத் திட்டம் தீட்டியதைப் பற்றி அந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்படுகின்றது.



ஒட்டகம்

ஒட்டகம் அதிகளவில் அல்குர்ஆனில் பல்வேறு அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விலங்காகும். பாலைவனங்களில் பிரத்தியேகமாக வசிக்கும் ஒட்டகங்கள் நீரின்றியும் நெடுங்காலம் ஜீவிக்கக் கூடிய விலங்காகக் காணப்படுகின்றன. ஒட்டகங்களில் அல்லாஹ்வின் அத்தாட்சி களைக் காணுமாறு புனித அல்குர்ஆன் பல்வேறு இடங்களில் பிரஸ்தாபிக்கின்றது. ''ஒட்டகங்கள் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளன என்று அவர்கள் பார்க்கவில்லையா?'' என அல்லாஹ் மனிதர்களை நோக்கி கேள்வி எழுப்புகின்றான். தனது படைப்புக்களைக் கண்டு வியந்து தனக்கு நன்றி செலுத்துபவனாக அடியான் மாற வேண்டும் என்பதே அவனது அவா.



நாய்

தன்னுடைய அத்தாட்சிகளை மறுக்கும் நிராகரிப்பாளர்களை நோக்கி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

*''நாம் நாடியிருந்தால் நம் அத்தாட்சிகளைக் கொண்டு அவனை உயர்த்தி இருப்போம். எனினும், அவன் இவ்வுலக வாழ்வை(யே சதமென) மதித்து, தன்னுடைய இச்சைகளையே பின்பற்றினான். அவனுக்கு உதாரணம் நாயைப் போன்றது. அதை நீர் விரட்டினாலும் நாக்கைத் தொங்க விடுகிறது அல்லது நீர் அதை விட்டு விட்டாலும் நாக்கைத் தொங்க விடுகின்றது. இதுவே நம் வசனங்களைப் பொய்யெனக் கூறும் கூட்டத்தாருக்கு உதாரணமாகும். ஆகவே, அவர்கள் சிந்தித்து நல்லுணர்வு பெறும் பொருட்டு (இத்தகைய) வரலாறுகளைக் கூறுவீராக!'' (ஸூரா அல்அராப் 7:176)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதிகளை சுமப்பதற்காகவும் போக்குவரத்து சாதனமாகவும் காலம் காலமாக மனிதன் குதிரையைப் பயன்படுத்தி வந்துள்ளான். இது மிகவும் பணிவானதும் எஜமானனுக்கு கட்டுப்படக் கூடியதும் விசுவாசமானதுமான விலங்காகும். போருக்குச் செல்லும் படைகளில் குதிரைப் படை மிகவும் முக்கியமானதாக கருதப்பட்டது. இவற்றின் வலிமை போருக்கு வலுச் சேர்த்தது. அல்லாஹ் கூறுகின்றான்:

''இன்னும் குதிரைகள், கோவேறு கழுதைகள், கழுதைகள் ஆகியவற்றை நீங்கள் ஏறிச் செல்வதற்காகவும் அலங்காரமாகவும் (அவனே படைத்துள்ளான்) இன்னும் நீங்கள் அறியாதவற்றையும் அவன் படைக்கின்றான்.'' (ஸூரா அந்நஹ்ல் 16:8)

நபி சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் குதிரைகள் மீது மிகவும் பிரியம் கொண்டவர்களாக விளங்கினார்.



குதிரை

---

## கொண்டலாத்தி / ஹுதுஹுது பறவை (Hoopoe)




அல்லாஹ்வின் மாபெரும் அருளினால் நபி சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் மிகப் பலம் பொருந்திய, செல்வந்த சாம்ராஜ்யம் ஒன்றைப் பெற்றிருந்தார். அவர்களுக்கு அல்லாஹ் பறவைகளின் மொழியைக் கற்றுக் கொடுத்திருந்தான். மிருகங்களையும் பறவைகளையும் ஜின்களையும் அல்லாஹ் நபி சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருந்தான். இது வேறெந்த நபிக்கும் கிடைக்கப் பெறாத அல்லாஹ்வின் தனித்துவமான அருளாகும். ஒருநாள் அவரது படையணியில் ஹுப்போ பறவையைக் காணாமையால் நபி சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) கடுங்கோபமுற்றார். தனது வருகையின்மைக்கு தகுந்த காரணம் கூறாத பட்சத்தில் கடுமையான தண்டனை வழங்கக் காத்திருந்தார். எனினும், ஹுப்போ பறவை சூரிய வழிபாட்டாளர்களைக் கொண்ட ஸபா நாட்டு அரசி பற்றிய செய்தியொன்றைக் கொண்டு வந்தது.

பின்னர் நபி சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் ஸபா நாட்டு அரசிக்கு இஸ்லாம் பற்றிய செய்தியை கடிதம் மூலமாக ஹுப்போ பறவையிடம் கொடுத்தனுப்பினார். அதனைப் பெற்றுக் கொண்ட ஸபா நாட்டு அரசி தனது மக்கள் சகிதமாக நபி சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களிடம் வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

---

பசு



பசு பல வகையிலும் மனிதர்களுக்குப் பயன் தரும் விலங்காகும். பாலுக்காகவும் இறைச்சிக்காகவும் பசுக்கள் பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன. அல்லாஹ் குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

''நிச்சயமாக உங்களுக்கு (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) கால்நடைகளிலும் (தக்க) படிப்பினை இருக்கின்றது. அவற்றின் வயிற்றிலுள்ள சாணத்திற்கும் இரத்தத்திற்கும் இடையிலிருந்து கலப்பற்ற பாலை அருந்துபவர்களுக்கு இனிமையானதாக (தாராளமாகப்) புகட்டுகிறோம்.'' (ஸூரா அந்நஹ்ல் 16:66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com

# கொட்டும் தேள்கள்



இந்தப் புகைப்படத்தைப் பார்க்கும்போதே உடம்பெல்லாம் புல்லரிக்கின்றது. ஒரு வகை அருவருப்புடன் கூடிய பயம் ஆட்கொள்கின்றது. காரணம் அவற்றின் தோற்றம் பார்க்க பயங்கரமாக இருப்பதால்தான். Scorpion என்றழைக்கப்படும் தேள்கள் கணுக்காலிகள் பிரிவைச் சேர்ந்த உயிரினமாகும். ஊர் வழக்கத்தில் 'நட்டுவாக் காலி' என்றும் கூறுவார்கள். இத்தொடரில் தேள்களின் வியத்தகு வாழ்க்கை முறை பற்றி உங்களுடன் பரிமாறிக் கொள்ள நினைக்கின்றேன்.



### உடற் தோற்றம்

தேள் இரண்டு பக்கங்களிலும் மும்மூன்று வீதம் ஆறு கால்களையும் முன்பக்கமாக கைகள் போன்று இரண்டு பிடிப்பான்களையும் கொண்டிருக்கும். இந்தக் கால்கள் மிக வேகமாக அவற்றுக்கு நகர உதவுகின்றன. இரைகளை லாவகமாகப் பற்றிப் பிடிப்பதும் சண்டையிடும்போது எதிரியை மடக்குவதும் முன்பக்கமாக உள்ள இரண்டு பிடிப்பான்களால்தான். பின்பக்கமாக நீண்ட வால் ஒன்று உண்டு. அதன் நுனியில் நச்சுத் தன்மையுள்ள கூர்மையான கொடுக்கு ஒன்றும் காணப்படுகின்றது. இரை அல்லது எதிரிகள் மீது நஞ்சைப் பாய்ச்சிக் கொல்வதற்கு இந்தக் கொடுக்கு உதவுகின்றது. அத்தோடு உடல் பூராகவும் எமது கண்களுக்கு தெளிவாகத் தென்படாதிருக்கும் நுண்ணிய மயிர்கள்தான் இவற்றின் உணர் கொம்புகள். சூழலை உணர்ந்து செயற்பட இம்மயிர்கள் இவற்றுக்கு உதவுகின்றன.

### வாழிடங்கள்

குளிர் பிரதேசங்கள் தவிர்ந்த மற்றைய எல்லாப் பகுதிகளிலும் தேள்களைக் காணலாம். அடர் காடுகள், மழைக் காடுகள், பாலைவன நிலங்கள், புதர்கள், பொந்துகள், மறைவான பகுதிகள் என எல்லா இடங்களிலும் இவை வாழ்கின்றன. மழைக் காலங்களில் தமது இருப்பிடங்களில் இருந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறுகின்றன. உலகில் வாழும் மிகப் பெரிய மற்றும் மிகச் சிறிய தேள் இனங்கள் இலங்கையில்தான் காணப்படுவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் விலங்கியல் விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்த குழுவொன்றினால் மேற்கொள்ளப் பட்ட ஆராய்ச்சியொன்றில் தெரிய வந்துள்ளது.

**எமது நாட்டிலும் தேள்கள்**

இலங்கையில் 18 வகையான தேள் இனங்கள் காணப்படுவதாகவும் அவற்றில் 14 வகையான தேள் இனங்கள் இந்நாட்டுக்கே உரித்தானவை எனவும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். பேராதனை பல்கலைக்கழக விலங்கியல் விஞ் ஞான பிரிவின் பேராசிரியர் கீர்த்தி சிரீ ரணவக மற்றும் தேள்கள் தொடர்பாக உலகிலேயே அதிகள வான பரிசோதனை மேற்கொண்டு வரும் ஆராய்ச்சியாளருமான குவாரிக் என்பவரும் சேர்ந்து இவ்வாராய்ச்சியை மேற்கொண்டுள்ளனர்.

உலகில் வாழும் மிகப் பெரிய தேள் இனமாக, 9 அங்குல நீளமான ஹெடொரொடெட்ரிஸ் ஸ்வடாம் மற்றும் மிகச் சிறிய தேள் இனமாக ஒரு சென்றி மீற்றர் நீளமான சாமுஸ் சரதியெல் என்ற எமது நாட்டுக்கு உரித்தான தேளினங்களும் ஆராய்ச்சியின்போது இனங்காணப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

**வாழ்க்கை முறை**

பாதுகாப்பான சூழலில் வாழும் ஒரு தேள் 4 ஆண்டுகள் வரை உயிர் வாழும். பிறந்து ஒரு வருடமாவதற்குள் அவை இனப்பெருக்கத்திற்குத் தயாராகி விடுகின்றன. ஆண்-பெண் தேள்கள் இனப்பெருக்கக் காலத்தில் ஒன்று சேர்ந்து விட்டு மீண்டும் பிரிந்து தனித் தனியாக வாழ ஆரம்பிக்கின்றன. அதற்குள் பெண் தேள் தனது உடலில் முட்டைகளைச் சுமக்கும். இதில் உள்ள ஆச்சரியம் என்னவென்றால், மற்றைய பூச்சிகள் போன்று முட்டைகளை ஒரு இடத்தில் வைத்துவிட்டு சென்று விடாமல் தமது வயிற்றிலேயே முட்டை களை அடைகாத்து குஞ்சுகளைப் பொறிக்கும். தாயின் வயிற்றிலிருந்து வெளியேறும் குஞ்சுகள் தரையிறங்காது தாயின் முதுகிலேயே அவற்றின் ஆரம்ப மாதங்களைக் கழிக்கும். இது பார்ப்பதற்கு அற்புதமாயிருக்கும். தாய் தன் குஞ்சுகளைத் தியாகத்துடன் முதுகில் சுமந்து கொண்டு வளர்க்கும். குஞ்சுகளைத் தூக்கிக் கொண்டு நகரும். அவற்றுக்கு இரைகளைப் பற்றி உண்ணக் கொடுக்கும். இவ்வாறு அழகானதொரு வாழ்க்கை முறை அவற்றிடம் உண்டு.

**உணவுப் பழக்கம்**

இவை சிறிய புழுக்களையும் பூச்சிகளையும் பிற சிறிய உயிரினங்களையும் உண்டு வாழ்கின்றன. பூரான்கள், வண்டுகள், நண்டுகள் இவற்றின் உணவுப் பட்டியலில் அடங்கும். சிலபோது ஒரு தேள் மற்றொரு தேளைக் கூட கொன்று வேட்டையாடி உண்டு விடும். ஒரு சமயத்தில் அதிகப்படியான உணவை உட்கொண்டு சேமித்துக் கொள்ளும் ஆற்றல் இவற்றுக்கு உண்டு. எனவே, ஆறு மாதங்கள் வரைக்கும் உணவுண்ணாமல் இவற்றால் வாழலாம்.


**ஆபத்தான விஷம்**



தேள்களின் வால் நுனியில் கூர்மையான ஊசி போன்ற ஒரு கொடுக்கு காணப்படுகின்றது. அதில் ஒரு வகை விஷத் திரவம் இருக்கின்றது. இரையைப் பற்றிக் கொண்டதும் அல்லது எதிரியுடன் சண்டையிடும்போதும் முன் னால் இருக்கும் கைகளால் அதனைப் பற்றிக் கொண்டு பின்னாலுள்ள வாலை முன்பக்கம் மடித்து சட் டென்று கொட்டி விடும். இது பலத்த வலியையும் சிலபோது ஆபத்தான தேள் வகையாயின் மர ணத்தையும் ஏற்படுத்தி விடும். இதுவரை கண்டறி யப்பட்டவற்றில் சுமார் 25 வகையான தேள்கள்தான் மரணத்தை ஏற்படுத்துமளவு விஷமுள்ளவை.

**அந்த விஷத்தில் மனிதனுக்குள்ள நன்மைகள்**

அவற்றின் பாதுகாப்புக்கு அவை விஷமாக இருந்தாலும் அதிலும் அல்லாஹ் மனிதனுக்குப் பலனை வைத்துள்ளான். தேள் கொட்டினால் ஆயுள் முழுவதும் மாரடைப்பு ஏற்படாது என இங்கிலாந்தை சேர்ந்த லீட்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் புதியதொரு ஆய்வு தெரிவிக்கின்றது. இதய நரம்புக் குழாய்களில் தேவைக்கதிகமாக இரத்தக் கலங்கள் விருத்தியடைவதால் இதயம் தொடர்பான நோய்கள் ஏற்படுகின்றது. உயிருக்கு ஆபத்தான இந்த பிரச்சி னையை சரி செய்ய, இதய அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. ஆனால், இந்த பிரச்சினையே வாழ்நாளில் ஏற்படாமல் இருக்க தேள் உதவுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேள் கொட்டும்போது அதன் கொடுக்கில் இருந்து விஷம் வெளியாகிறது. அந்த விஷத்தில் மார்கடாக்சின் என்ற பொருள் இருக்கிறது. அது இதயத் தமனியில் நியோயின்டிமல் ஹைபர் பிளேசியா உருவாவதை தடுக்கிறது. அதன்மூலம், புதிய செல்கள் உருவாவது தடுக்கப்பட்டு, இதயத்தில் அடைப்பு, செயலிழப்பு தவிர்க்கப்படும். இதயத் தமனிகளில் புதிய செல்கள் உருவாவதை மாரகடாக்சினில் உள்ள கேவி 1.3 என்ற பொட்டாசியம் தடுத்து இதயத்தை ஆரோக்கியமாக வைக்கும் என அந்த ஆய்வு சுட்டிக் காட்டுகின்றது. பிரிட்டிஷ் ஹார்ட் பவுண்டேஷனின் (BHF) இயக்குனர் கூறுகையில், ''தேளின் விஷத்தில் உள்ள மார்கடாக்சினை முறையாக பயன்படுத்தினால், ஆபத்தான இதய நோய்களுக்கு மருத்துவப் பயன்களைப் பெறலாம் என்பது உறுதி'' என்கிறார்.



## மற்றுமொரு நன்மை

''தேளின் விஷம் மிகக் கொடியதாக இருந்தாலும் அதையும் சிறந்த வலி நிவாரணியாகப் பயன்படுத்தலாம்'' என இஸ்ரேல் நாட்டின் ஆய்வாளர் மைக்கல் குர்விட்ஸ் அவர்களும் அவரது ஆய்வுக் குழுவும் கூறுகின்றனர். இஸ்ரேலின் டெல் அவிவ் பல்கலைக்கழக தாவர அறிவியல் துறை பேராசிரியர் மைக்கேல் குர்விட்ஸ் கூறுகையில், ''தேளின் விஷத்திலிருந்து சிறந்த வலி நிவாரணியை உருவாக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. இது குறித்து விரிவாக ஆய்வு செய்து வருகிறொம். எந்தவித பக்க விளைவையும் தேளின் விஷத்திலிருந்து உருவாக்கப்படும் வலி நிவாரணி ஏற்படுத்தாது. தேளின் விஷத்தில் உள்ள பெப்டைட் டாக்சின்கள், நமது நரம்பு மண்டலம் மற்றும் சதைப் பகுதிகளில் ஊடுருவி வலியை முற்றிலுமாக அகற்ற உதவும். சத்திர சிகிச்சைகளின்போது இதனை உச்ச அளவில் பயன்படுத்தலாம்'' என அவர் தெரிவிக்கின்றார்.

''பாலூட்டிகளின் உடல்களில் ஒன்பது வகையான சோடியம் வழிகள் (sodium channels) காணப்படுகிறன. இவற்றில் சில வலியை உருவாக்கி அதை மூளைக்கு தெரிவிக்கிறது. இந்த சோடியம் சேனல்களில் பெப்டைட் டாக்சின்கள் எவ்வாறு செயல்பட முடியும் என்பதை ஆராய்ந்து வருகிறோம். இதை சரி செய்து விட்டால் நிச்சயம் இந்த வலி நிவாரணியை வெற்றிகரமாக உருவாக்க முடியும். மேலும் வலி உருவாகும் இடத்தையும் துல்லியமாக கண்டறிந்து அந்த இடத்தில் மட்டும் மருந்து செயலாற்றும் வகையில் செய்ய முடியும். இதன் மூலம் பல்வேறு பக்க விளைவுகளை நாம் தவிர்க்கலாம்'' என்கிறார் குர்விட்ஸ்.

## தேள்களின் எதிரி

காகம், பருந்து,கோழி, பூனை என தேள்களுக்கு எதிரிகள் நிறையவே இருக்கின்றன. அதற்கும் அப்பால் அவற்றின் பெரும் எதிரி மனிதன்தான். தேள்களைக் கண்டதும் அவற்றின் மீதுள்ள பயத்தில் உடனே அடித்துக் கொன்று விடுகின்றோம். அத்தோடு பயிர் நிலங்களுக்கு அடிக்கும் பூச்சி கொல்லி மருந்துகளாலும் தேள்கள் அழிந்து வருகின்றன. முன்பெல்லாம் சாதாரணமாகக் காணக் கூடிய தேள்களை இன்று பார்ப்பது மிகவும் அரிது. புராண பிரமிட் காலம் முதல் தேள்கள் அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ளன. எகிப்தில் தேள் கடவுளாக வணங்கப்பட்டும் வந்துள்ளது. இப்போதும் தேளின் உருவத்தை பாதுகாப்புக் கருதி உடம்பில் பச்சை குத்துபவர்களைப் பார்க்கிறோம். விருட்ச ராசி என்பது தேளை வைத்து பார்க்கப்படும் மூடத்தனமான ஜோதிட முறையாகும். சீனர்களின் உணவு வகைகளில் தேளும் உண்டு. பொரித்து, வறுத்து சமைத்து உண்பார்கள். Scorpion King திரைப்படம் போன்று தேளை சம்பந்தப்படுத்தி ஹாலிவுட் திரைப்படங்கள்கூட எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தேளுக்கும் மனிதனுக்கும் இடையில் வரலாற்று ரீதியான தொடர்புகள் இருக்கின்றன. எப்படியோ தேளிலும் மனிதனுக்குப் பல பயன்களை வைத்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும், அல்ஹம்துலில்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்**

# கழுதை



எம்.ஏ. ரஹ்மான்

உலக அதிசயங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் தாஜ்மஹால் என்ற அதியற்புத கட்டடத்தைத் தன் மனைவியின் நினைவாக நிறுவியவர் ஷாஜஹான் சக்கரவர்த்தியாவார். அவருடைய கலை உள்ளம் இற்றை வரை எல்லோரையும் வியப்பில் ஆழ்த்திக் கொண்டே இருக்கின்றது.

சக்கரவர்த்தி ஷாஜஹான் ஒரு சமயம் வேட்டையாடச் சென்றிருந்தார். அப்பொழுது தம்முடன் வந்த வேட்டைக்காரரிடமிருந்து அவர் பிரிய நேரிட்டது. அவர் மிகவும் களைப்படைந்திருந்தார். தாகத்திலே தவித்தார். எனவே, அயலிற் காணப்பட்ட கிராமத்திற்குள் சென்றார். அந்த வழியாக சென்றவர்களுக்குத் தண்ணீர் வழங்கிக் கொண்டிருந்த பிராமணன் ஒருவனைக் கண்டார். சக்கரவர்த்தி அவனை அணுகித் தமக்கும் தண்ணீர் தரும்படி கேட்டார். அவன் அவருக்குத் தண்ணீர் கொடுத்தான்.

அவர் மிகவும் அவசரப்பட்டுத் தண்ணீர் குடிப்பதைக் கண்ட பிராமணன், அவருடைய தண்ணீர்க் குவளையிலே புல் நறுக்குகள் சிலவற்றைத் தூவினான். இதன் காரணமாக சக்கரவர்த்தி தண்ணீரை மெதுவாகக் குடிக்கும் நிலை ஏற்பட்டது.

ஷாஜஹான் ஆத்திரத்துடன் ''இந்தக் குவளையிலே ஏன் புல் நறுக்குகளைப் போட்டாய்?'' எனக் கேட்டார்.

''களைப்புடன் தண்ணீர் அருந்தும் என் கழுதைகளுக்கு வைக்கும் நீரிலே புல் நறுக்கு களைப் போடுவேன். மிக விரைவாக நீர் அருந்தினால் வயிற்று வலி உண்டாகும்'' என்று பிராமணன் பதிலளித்தான்.

தாகத்தைப் போக்கிய சக்கரவர்த்தி பக்கத்திலிருந்த மர நிழலிலே இளைப்பாறினார். அப்பொழுதுதான் அவருடன் கூட வந்த வில்லாளிகள் அங்கு வந்து சேர்ந்தார்கள். தான் கழுதையுடன் ஒப்பிட்டவர் யார் என்ற ஞான விடிவு பிராமணனுக்கு ஏற்படுவதாயிற்று. அச்சத்தின் வசப்பட்ட பிராமணன் நிலத்திலே விழுந்து, தன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டான்.

பிராமணனின் நோக்கம் நேர்மையானதாக இருந்ததை உணர்ந்த சக்கரவர்த்தி முறுவலித்தார். அந்தப் பிராமணனுக்கு கிராமம் ஒன்றினை நன்கொடையாக வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்




# பொது அறிவு

உலகின் மிக நீளமான ஆறு - நைல் நதி
உலகின் மிக உயரமான மலைச்சிகரம் - எவரெஸ்ட்
உலகின் மிகப் பெரிய பாலைவனம் - சஹாரா
உலகின் மிகப் பெரிய நதி - மிசிசிபி
உலகில் மிகப் பெரிய காடு - அமேசன்
உலகின் மகிப் பெரிய தீவு - கிரீன்லாந்து
உலகின் மிகப் பெரிய கடல் - மத்திய தரைக் கடல்
உலகின் மிக நீளமான மலை - அந்தீஸ் மலை
உலகில் அதிகம் பேசப்படும் மொழி - சீன மொழி
உலகில் சனத்தொகை கூடிய நகரம் - டோக்கியோ

✍ **எம்.எஸ்.எப். சஆமா**
**குளி/அல்பலாஹ் ஆ.பா.**



# உளநோயிலிருந்து பாதுகாப்புப் பெற...

❖ திக்ர், துஆ, இஸ்ஃபார் போன்றவற்றில் ஈடுபடல்
❖ அல்லாஹ்வுடன் முனாஜாத் செய்தல்
❖ படைப்பினங்களைப் பற்றிச் சிந்தித்தல்
❖ இரவு நேரம் வணக்கங்களில் ஈடுபடல்
❖ தனிமையில் இறைவனை நினைத்து அழுதல்
❖ மண்ணறையைத் தரிசித்தல், நோயுற்றவர்களை சுகம் விசாரித்தல்
❖ முஹாஸபா செய்தல்
❖ ஸுன்னத்தான் தொழுகை, நோன்பு நோற்றல்
❖ தர்மம் செய்தல்

✍ **எப்.எம். பர்ஹான்**
**சிராஜ் அரபுக் கல்லூரி**
**ஓட்டமாவடி**

# செயல்படுத்து

| | |
|---|---|
| நட... | அதிர்வின்றி |
| பேசு... | பணிவாக |
| உண்ணு... | அளவாக |
| சுவாசி... | ஆழமாக |
| தூங்கு... | அமைதியாக |
| உடுத்து... | அழகாக |
| செயல்படு... | அச்சமின்றி |
| உழை... | உண்மையாக |
| சிந்தி... | சுயமாக |
| நம்பு... | சரியாக |
| பழகு... | நாகரிகமாக |
| திட்டமிடு... | முன்னதாக |
| ஈட்டு... | நேர்மையாக |
| சேமி... | சிறிதாவது |
| செலவிடு... | யோசித்து |
| நேசி... | உயிராக |
| படி... | முடிவின்றி |
| மரணி... | பயமின்றி |

✍ **எச்.எப். நுஹா**
**பு/ரிஷாட் பதியுதீன் ம.வி.**
**அல்காஸிமி சிட்டி**
**பாலாவி**

# அறிவின் பிறப்பிடம் ஆசான்!

கல்வி எனும் பரந்த கடலில்
அறிவு எனும் தேனை ஊற்றி
பாசம் எனும் உன் உறவையும் வழங்கி
என்னை பண்படையச் செய்தாய்

இவ்வுலகில் அளப்பரிய சேவை
ஆசான் எனும் உன் சேவை
அதற்கு ஈடு இல்லை இவ்வுலகில் ஏதும்!!

✍ **ரிப்கா ரஜப்தீன்**
**அல்முஃமினாத் பெ.அ.க.**
**அகுரணை**

# இலங்கையின் உயரமான மலைகள்

| | |
|---|---|
| பீதுறுதலாகலை | 2,524 M |
| கிரிகால பொத்த | 2,388 M |
| தொடுபல கண்ட | 2,357 M |
| அடம்ஸ்பீக் | 2,300 M |
| கிக்கிலியமானா | 2,237 M |

✍ **நூருல் ஹயா**
**முல்லையூர், நுரைச்சோலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாடுகளும் அதன் தலைநகரங்களும்

| | |
|---|---|
| அமெரிக்கா | - வொஷிங்டன் |
| சுவிட்ஸர்லாந்து | - பேரின் |
| அவுஸ்திரேலியா | - சிட்னி |
| சீனா | - பீஜிங் |
| நெதர்லாந்து | - ஆம்ஸ்டர்டாம் |
| பிரேசில் | - றியோடி ஜெனீரோ |
| நோர்வே | - ஒஸ்லோ |
| ஆர்ஜன்டீனா | - புவனஸ் அயலி |
| கனடா | - ஒட்டாவா |
| பிரான்ஸ் | - பாரிஸ் |

✎ **இன்ஹா பின்த் இப்றாஹிம் ஸஹீத்**
**ஜாமிஆ ஆயிஷா சித்திக்கா**
**மாவனல்லை**

# முக்கிய தினங்கள்

✎ ஜனவரி 12 தேசிய இளைஞர் தினம்
✎ பெப்ரவரி 04 இலங்கையின் சுதந்திர தினம்
✎ பெப்ரவரி 17 உலக நோயாளர் தினம்
✎ பெப்ரவரி 22 உலக சாரணியர் தினம்
✎ பெப்ரவரி 28 தேசிய அறிவியல் தினம்
✎ மார்ச் 08 சர்வதேச பெண்கள் தினம்
✎ மார்ச் 11 பொதுநலவாய தினம்
✎ மார்ச் 13 உலக சிக்கன தினம்
✎ மார்ச் 15 உலக ஊனமுற்றோர் தினம்
✎ மார்ச் 21 உலக வன தினம்
✎ மார்ச் 22 உலக நன்னீர் தினம்
✎ மார்ச் 23 உலக வளிமண்டல தினம்




✎ **எம்.ஏ.எல்.எம். அப்ஸல்**
**சில/ஸவரன மு.வி.**
**சிலாபம்**

# அழகிய பொன்மொழிகள் சில...

- ❖ கண்ணியம், கௌரவம் என்ற வாசலை அடைத்து பணிவு என்ற வாசலை திறக்க வேண்டும்.
- ❖ தூக்கம் என்ற வாசலை அடைத்து விழிப்பு என்ற வாசலை திறக்க வேண்டும்.
- ❖ சீமான் என்ற வாசலை அடைத்து ஏழ்மையின் வாசலை திறக்க வேண்டும்.
- ❖ பகலில் அல்லாஹ்வுக்கு மாறு புரியாமலிருந்தால் இரவில் தஹஜ்ஜுத் தொழுவது எளிதாகி விடும்.
- ❖ மனிதர்களின் பொருத்தத்தை மாத்திரம் விரும்புபவன் அல்லாஹ்வின் பொருத்தத்தை எதிர்பார்க்க முடியாது.
- ❖ அதிகமாக தூங்குபவனின் வாழ்க்கையில் பரகத் இருக்காது.
- ❖ பொய், புறம், வீண்பேச்சு இவற்றில் ஈடுபடுபவன் இஸ்லாத்தில் மரணத்தை எதிர்பார்க்க முடியாது.

✎ **பாத்திமா நஸீபா**
**மட்/அல்ஹம்ரா வித்தியாலயம்**
**செமண்னோடை**

# பாவத்தின் விளைவுகளில் சில...

- ❖ இம்மையிலும் மறுமையிலும் இன்னும் உடலிலும் உள்ளத்திலும் தீங்காகத்தான் இருக்கும்.
- ❖ அல்லாஹ்விடம் இருந்து பெறப்படும் அறிவு தடைப்படும்.
- ❖ அல்லாஹ்விடம் இருந்து பெறப்படுகின்ற வாழ்வாதாரம் தடைப்படும்.
- ❖ அவனின் பால் அவனது விடயம் கஷ்டமாக அமையும்.
- ❖ நிச்சயமாக பாவம் உடலையும் உள்ளத்தையும் பலவீனப்படுத்தி விடும்.
- ❖ அல்லாஹ்வை வழிப்படுவது தடைப்பட்டு விடும்.
- ❖ நிச்சயமாக பாவம் காலத்தை சுருக்கி விடும்; இன்னும் பரக்கத்தை அழித்து விடும்.

✎ **ஏ.எஸ். சிபான்**
**ஸிறாஜிய்யா அ.க.**
**ஓட்டமாவடி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகை வெல்ல உன்னத ரகசியங்கள்

மத்ஹா மன்ஸூர்
மஹகம
பாணகமுவ

- வெற்றி வேண்டுமா? பேசும் முன் கேளுங்கள். எழுத முன் யோசியுங்கள். செலவழிக்க முன் சம்பாதியுங்கள். சில சமயங்களில் இழப்புத்தான் பெரிய ஆதாயம்.
- நான் மாறும்போது தானும் மாறி, நான் தலை யசைக்கும்போது தானும் தலையசைக்கும் நண்பன் எனக்குத் தேவையில்லை. அதற்கு என் நிழலே போதும்!
- நோயை விட அச்சம் அதிகம் கொல்லும்.
- நம்மிடம் பெரிய தவறுகள் இல்லை எனக் குறிப் பிடுகிறோம். அதன் மூலம் சிறிய தவறுகளை ஒப்புக் கொள்கின்றோம்.
- சமையல் சரியாக அமையாவிட்டால் ஒருநாள் இழப்பு; அறுவடை சிறக்காவிட்டால் ஓர் ஆண்டு இழப்பு.
- இலக்குகள் சரியாக இல்லா விட்டால் வாழ்நாள் முழுவதும் இழப்பு; ஓடுவதில் பயனில்லை நேரத்திற்குப் புறப்படுங்கள்!
- எல்லோரையும் நேசிப்பது சிரமம். ஆனால், பழகிக் கொள்ளுங்கள்; நல்லவர்களோடு நட்பாய் இரு நீயும் நல்லவனாவாய்!
- இவர்கள் ஏன் இப்படி? என்பதை விட இவர்கள் இப்படித்தான் என எண்ணிக் கொள்.
- யார் சொல்வது சரி என்பதை விட எது சரி என்பது முக்கியம்!
- பலமுறை சிந்தியுங்கள்; ஒரு முறை முடிவு எடுங்கள்.
- உண்மை தனியாகச் செல்லும், பொய்க்குத் தான் துணை வேண்டும்.
- தன்னை ஒருவராலும் ஏமாற்ற முடியாது என பெருமிதமாக இருப்பவன் கண்டிப்பாக ஒரு நாள் ஏமாந்து விடுவது திண்ணம்!
- அன்பையும் ஆற்றலையும் இடைவிடாது வெளிப்படுத்துகின்றவன் ஆர்வத்துடன் பணி புரிவான்!
- வெற்றி பெற்ற பின் தன்னை அடக்கி வைத்துக் கொள்பவனே இரண்டாம் முறையும் வெற்றி பெறுகிறான்.
- தோல்வி ஏற்படுவது அடுத்த செயலைக் கவன மாக செய்வதற்கான எச்சரிக்கை!
- கடினமான செயலின் சரியான பெயர்தான் சாதனை!
- சாதனையின் தவறான விம்பம்தான் கடினம்.
- ஒரு துளி பேனா மை போதும் பத்து இலட்சம் பேரை சிந்திக்க வைக்க.
- துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்து விடு. ஆனால், அது உனக்கு கற்பித்த பாடத்தை மறந்து விடாதே!
- இறைவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல; உன்னைப் போல சாதிக்கத் துடிக்கும் புத்திசாலிகளையே!!

## உடல் வலிமை பெற மரக்கறியின் பங்களிப்பு

எப். ருஷ்தா அவ்வாஹுன்
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க.
ஓட்டமாவடி

| | |
|---|---|
| மூளை வளர்ச்சி பெற | - சுண்டைக்காய் |
| சீரான இரத்த ஓட்டத்திற்கு | - பீட்ரூட் |
| கண்பார்வை, உடல் குளிர்ச்சிக்கு | - கீரை |
| வயிற்றில் பூச்சி நீங்க | - பாகற்காய், முள்ளங்கி மற்றும் தேங்காய்ப்பால் |
| சிறுநீரக கோளாறு நீங்க | - அவரை, பீர்க்கு |
| சிறுநீரக கல் அடைப்பு நீங்க | - அவரை, பீர்க்கு |
| வயிற்றுப் புண் நீங்க | - வாழைத் தண்டு |
| இரத்த விருத்திக்கு | - நெல்லிக் காய் |
| அஜீரணக் கோளாறு, வயிற்று வலி, சளித் தொல்லை நீங்க | - சுண்டைக்காய் |
| வயிற்றுப் புண் நீங்க | - தேங்காய்ப்பால் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்



ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும்
அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு அரசன் ஒருவன் சூனியம் செய்து ஒரு கிணற்றடியிலே போட்டிருந்தான். அக்கிணற்றின் பெயர் என்ன?
2. நபி லூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் தந்தையின் பெயர் என்ன?
3. இஸ்லாமிய வரலாற்றிலே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கலந்து கொண்ட யுத்தங்களில் இறுதியாகக் கலந்து கொண்ட யுத்தம் எது?
4. இஸ்லாமிய நீதி பரிபாலனத்திலே அவதூறு சொல்வோருக்கு 80 கசையடிகள் தண்டனையாக வழங்கப்படுகின்றன. இதேபோல் மதுவருந்துவோருக்கான தண்டனை யாது?
5. ஹஸரத் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களைக் கொன்றவனின் பெயர் என்ன?
6. ஹஸரத் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட ஹிஜ்ரி ஆண்டு எது?
7. இஸ்லாமிய வரலாற்றில் ஸையிதுஷ் ஷுஹதா (ஷுஹதாக்களின் தந்தை) என அழைக்கப்பட்டவர் யார்?
8. 'வுஜூதுன்' என்ற ஸிபத்துக்கு மாறான ஸிபத்து எது?
9. ஸகாத் பெறத் தகுதியுள்ளவர்கள் காணப்படாதிருந்தமை எந்த கலீபா அவர்களின் காலத்தில்?
10. ஹஜ்ஜுக்காக நிய்யத்து வைக்கும் முறைகள் நான்கு ஆகும். இவற்றுள் ஹஜ்ஜை மாத்திரம் கருதி நிய்யத்து வைக்கும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?
11. புனித அல்குர்ஆனின் மொத்த சூராக்கள் 114 ஆகும். இவற்றுள் மக்காவில் இறங்கிய சூராக்கள் எத்தனை? மதீனாவில் இறங்கிய சூராக்கள் எத்தனை?
12. 'அல்லாஹுத் தஆலாவின் வாள்' என்று வர்ணிக்கப்பட்ட ஸஹாபியின் பெயர் என்ன?
13. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் அருமை மனைவியருள் ஒருவரைத் தவிர ஏனையவர்கள் விதவைகளாகவே இருந்தனர். விதவையல்லாத ஒரேயொருவர் யார்?
14. 'நூர்' என்ற அரபுச் சொல்லுக்கான கருத்து யாது?
15. மூஸிக் நூரி என்றால் இறை ஒளி. நஜ்முல் உம்மா என்றால் சமூகத் தாரகை. நஜ்முல் உலூம் என்றால் என்ன?
16. ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கும் அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கும் திருமணம் நடந்த வேளையில் நிக்காஹ் குத்பாவை ஓதியவர் யார்?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளுள் 5 நிரந்தர உறுப்புரிமை பெற்ற நாடுகளாகும். ஏனைய 10 நாடுகளும் பொதுச் சபையிலிருந்து தெரிவு செய்யப்படும் நாடுகளாகும். இவ்வாறு தெரிவு செய்யப்படும் ஒரு நாடு எத்தனை வருடங்களுக்கு பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் வகிக்கத் தகுதி பெற்றிருக்கும்?
2. உலகின் மிகப் பெரிய இந்து மத நாடு எது?
3. இலங்கையில் ஒல்லாந்தரின் ஆட்சி ஆரம்பமான ஆண்டு எது?
4. ஒரு வியாபாரி மேற்கொள்ளக் கூடிய பிரதான வியாபார முறைகள் நான்கும் எவை?
5. புதிய மில்லேனியத்தின் முதலாவது ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற்ற சிட்னி மாநகர் தென்கிழக்கு அவுஸ்திரேலியாவின் எந்த மாநிலத்தின் தலைநகராகும்?
6. புத்தளம் சீமெந்துக் கம்பனி, ஹிங்குறானை சீனித் தொழிற்சாலை என்பன எத்தனையாம் ஆண்டில் தனியார் மயப்படுத்தப்பட்டன?
7. இலங்கையின் கடைசி பிரித்தானிய தேசாதிபதி யார்?

விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

مَاذَا تُرِيْدُ أَنْ تَكُوْنَ؟ ← أُرِيْدُ أَنْ أَكُوْنَ

مَاذَا تُرِيْدُ أَنْ تُصْبِحَ؟ ← أُرِيْدُ أن أصبح — مُدَرِّسًا

مَاذَا تتمَنَّى أَنْ تَكُوْنَ؟ ← أَتَمَنَّى أَنْ أَكُوْنَ

مَاذَا تُرِيدين أَنْ تَكُوْنِي؟ ← أُرِيْدُ أَنْ أَكُوْنَ مُدَرِّسَةً

أُرِيْدُ أَنْ أَكُوْنَ .................



DOCTOR
طَبِيْبًا



ENGINEER
مُهَنْدِسًا



PAINTER
دَهَّانًا



WELDER
لَحَّامًا




NURSE
مُمَرِّضَةً



ACCOUNTANT
مُحَاسِبًا



ACTOR
مُمَثِّلًا




ARTIST
فَنَّانًا



BAKER
خَبَّازًا



MASON
بَنَّاءً



BUTCHER
جَزَّارًا



CARPENTER
نَجَّارًا



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




COOK
طبَّاخًا



FISHERMAN
صَيَّاد سَمَكٍ



DENTIST
طَبِيْبَ الأَسْنَانِ



POLICE
شُرْطِيًا



GARDENER
بُسْتَانِيًا



TAILOR
خَيَّاطًا



PHOTOGRAPHER
مُصَوِّرًا




SALESMAN
تَاجِرًا



BARBER
حَلَّاقًا



SAILOR
بَحَّارًا




FARMER
فَلَّاحًا



GROCER
بَقَّالًا




SMITH
حَدَّادًا



WRITER
كَاتِبًا



TRANSLATOR
مُتَرْجِمًا



JUSTICE
قَاضِيًا




LAWYER
مُحَامِيًا



PILOT
طَيَّارًا




GUARD
حَارِسًا



GATEKEEPER
بَوَّابًا




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan

## Assalamu alaikum dear friends,




The word we have been hearing most commonly in the recent past is "Racism". I guess many of my little friends who did not know about this word too, would have learned what does racism mean by looking at the inciden ts that took place in the country recently.

Racism basically means the belief of one's own racial group is superior to the others or it means that considering all other racial groups to be inferior to that of one's own racial group. Racism is in fact a very dangerous thing that can harm the entire society.

Thinking that our race, our skin colour, our country and our religion is greater than anything else can create conflicts and havoc in society. Racism has the ability to disturb the peace in society. Racism also creates divisions in society.

Islam is strongly against racism. Allah (swt) created different races and tribes so that people may recognize each other and learn from each other. The prophet of Allah mentions that righteousness is the only quality that makes someone virtuous in the sight of Allah. It is not race, skin color, lineage or any others.

Now you may be wondering as to why am I talking about racism all of a sudden. You all know that we Muslims are a minority group living in Sri Lanka where the majority is the Sinhala Buddhist people. Recently our country witnessed racial discrimination against the Muslims living in Sri Lanka. We, Muslims were charged against spreading terrorism in the nation. There were also allegations made against the dress code of Muslim women. Some people went to the extent posting extreme hate speech against the Muslims in the social media. The very existence of the Muslim community in the country has become a question now.

What should we as young Muslims do at this kind of a situation?

- Firstly we should make Dua from Allah. As we all know Dua is the most powerful weapon.
- We must not try to take revenge from them. In fact being patient is the best thing we can do at such times.
- We must be extra careful while travelling outside or posting stuffs in the social media. Even a small mistake of us can enrage them to a great extent.

So, it is the need of the time for us to cautiously tread. Keep on making Dua.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hadith of the month

Narrated Abu Musa:
Some people asked Allah's Apostle, "Whose Islam is the best? i.e. (Who is a very good Muslim)?" He replied, "One who avoids harming the Muslims with his tongue and hands."

## Your Corner

# Protect water


Water is an important thing to living beings. Nobody can live without water. There are so many water resources by which we get water. Some of them are rivers, streams, rain. The rain water is very clean and pure. There are numerous benefits we get from water.

Both humans and animals need water to drink. Even trees need water for survival.

It is our duty to protect water resources. Most people pollute water and they also waste water.

Save every drop of water for us and the next generation

*A.M.F Shafna 10 B*
*Kg/Mw Thalgaspitiya M.MV*



# *Laugh* a while:

Dad: "Can I see your report card, son?"

Son: "I don't have it."

Dad: "Why?"

Son: "I gave it to my friend. He wanted to scare his parents."



# Value of Trees

Trees are very useful. Both human beings and animals cannot live without trees.

Trees provide us food, medicine, timber and shelter. Tees save us from the scorching rays of the sun. We get the most needed rain because of trees.

Trees make the environment cool and beautiful. The earth is cool, bright and beautiful because there are trees in it. Trees prevent soil erosion.

Most of us have not realized the value of trees. We cut down trees for our needs in a careless way. If a tree is cut down, we must plant another tree in that place. If trees are destroyed, the earth would turn in to a desert.

Let us protect trees.

*M.R.F Rasna Rafeek 8A*
*Giri/Al Ameen Central College*
*Elabadagama.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# My loving Brother

Hi friends! My loving brother name is AM.Jafran. He is the first son in our little family. He is a referee. He has round face and dark hair. He always spends his leisure time playing football and browsing use full matters for increase his knowledge. I think my brother is quite handsome guy like my father and such a talented boy. He keeps everyone of us laughing with his words and actions. He has helping mind and he has innovation ideas. He is an educated boy so; he helps us in our studies and looks into all our needs. As he is the first son of my family he has many responsibilities in everyone. When my dad has trouble with his financial problem, he gives him full of support. He is a good role model to us. He is professionally a football referee. I wish him for his dream career. I pray from Allah to fulfill his goal. Thanks to Allah for giving me such a lovely brother. I love him so much!

***AF.AQSHA,***
***GRADE-11***
***KL/MAHMOOD BALIKA,***
***KALMUNAI.***



# The hungry Wolf

A hungry wolf was searching for food in the morning. As he passed a door of a cottage built on the edge of the forest, he heard a mother saying to her crying child, "Be quiet, or I will throw you out the window for the wolf to eat you". The wolf was delighted to hear this. He sat all day waiting under the window. In the evening, he heard the same woman fondling her child and saying, "IF the wolf comes here your father will kill him immediately". The wolf heard this and went back cold and hungry.

Moral: Do not believe everything you hear.

***M.R Kadheeja 09***
***An Noor Central College***
***Panagamuwa***

# Things to remember

- Time is gold
- Time is money
- Time stops for no one
- Time is what we want most but what we use worst
- One has always enough time if one uses it well
- A man who dares to waste one hour has not discovered the value of life

***Sidhique Fathima Sajinis***
***Fathima Zahra Ladies Arabic College***
***Oddamavadi***

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

**I learn every day**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றில் ஒரு நாள்

இற்றைக்கு சுமார் 42 வருடங்களுக்கு முன்பு மக்கா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த **Martin Air Flight** 138 என்ற விமானம் இரவு பத்து மணியளவில் 182 பயணிகளுடனும் 09 விமானப் பணியாளர்களுடனும் விபத்துக்குள்ளானது. விபத்து நடந்தபொழுது விமானத்தில் பயணித்த 191 பேரும் உயிரிழந்தனர். அந்தக் காலப் பகுதியில் இடம்பெற்ற இரண்டாவது பயங்கரமான விமான விபத்து என்று வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறித்த விமானம் இந்தோனேஷியாவின் சுரபாயா **(Surabeya)** விமான நிலையத்தில் பயணத்தை ஆரம்பித்து சவூதி அரேபியாவின் ஜித்தா விமான நிலையத்தில் நிறைவு செய்யவிருந்தது. ஒல்லாந்து விமான சேவை நிறுவனமான **Martin Air** என்பது இந்தோனேஷியாவின் தேசிய விமான சேவை நிறுவனமான கருடா இந்தோனேஷியா **(Garuda Indonasia)** நிறுவனத்தின் விமானப் போக்குவரத்துப் பங்காளர்களாக செயற்பட்ட ஒரு நிறுவனமாகும். இந்தோனேஷியாவில் இருந்து பயணத்தை ஆரம்பித்த விமானம் இரவு 10.10 மணியளவில் ஸ்ரீ பாத காட்டுப் பகுதியில் அமைந்துள்ள ''நோட்டன் ப்ரிஜ்'' பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ''சப்த கன்யா'' என்ற மலைத்தொடரின் உச்சியில் மோதி விபத்துக்குள்ளானது. போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் குறைந்த காலம் என்பதால் விபத்தில் பாதிக்கப்பட்ட எந்த ஓர் உயிரையும் காப்பாற்ற முடியவில்லை. தகவல்களின் படி ஒரே ஒரு விமானப் பணிப்பெண்ணின் உடல் மட்டும் இந்தோனேஷியாவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. ஏனைய 190 பேரது உடல்களும் ''சப்த கன்யா'' மலைப் பகுதியிலேயே புதைக்கப்பட்டுள்ளது. இன்றும் இந்த விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த அவர்களது உறவினர்கள் இலங்கை வருகிறார்களாம். அத்தோடு விபத்துக்குள்ளான விமானத்தின் சக்கரம் ஒன்றும் ஞாபகார்த்தமாக சம்பவ இடத்தில் வைக்கப்பட்டுள்ளதை இன்றும் காண முடியும். ''ஹென்ட்ரிக் லேம்'' என்ற அனுபவமிக்க விமானி ஒருவரால் செலுத்தப்பட்ட இந்த விமானத்தின் விபத்துக்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும், உறுதியான காரணம் இன்றுவரை கண்டுபிடிக்கப்பட வில்லை. '''நோட்டன் ப்ரிஜ் பொலிஸ் நிலையத்தின் சொத்து'' என்ற விளம்பரத்துடன் **"Martin Air DL 8 Plane of Holland"** என்று ஆங்கிலத்திலும், ''ஒல்லாந்து அரசுக்கு சொந்தமான **Martin Air** விமானத்தினது'' என்று சிங்களத்திலும் குறிப்பிடப்பட்ட விளம்பரம் ஒன்று சம்பவ இடத்தில் இன்றும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

---

**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. தர்வான்
2. ஹாறான்
3. தபூக் யுத்தம்
4. 40 கசையடிகள்
5. அபூலுஃலூ
6. ஹிஜ்ரி 23
7. ஹம்ஸா (ரழியல்லாஹு அலைஹு)
8. அதமுன்
9. கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ்
10. அல் இப்றாத்
11. மக்காவில் - 86, மதீனாவில் 28
12. காலித் இப்னு வலீத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்
13. அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள்
14. வெளிச்சம்
15. அறிவுத்தாரகை
16. ஹஸரத் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்

**பொது அறிவு**

13. 2 வருடங்கள்
14. நேபாளம்
15. 1658
16. காசு வியாபாரம், கடன் வியாபாரம், ஏலவிற்பனை, கேள்விப்பத்திர முறை
17. நியூ சவுத்வேல்ஸ்
18. 1993 இல்
19. சேர் ஹென்றி மங்மேசன் மூர்

---

## எண்ணங்களின் வண்ணங்கள் - 18

**தலைப்பு: எனது புதிய வகுப்பறை...**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 ஜனவரி 20**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம்சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 15

## ஒல்லாந்தர் காலப் பிரிவில் முஸ்லிம்கள்

அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்தெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

இலங்கையில் ஒல்லாந்தரின் பிரவேசம் போர்த்துக் கேயரது பிரவேசத்தைப்போல தற்செயலாக ஏற்பட்டதல்ல. கி.பி. 1602 ஆம் ஆண்டு ஜொரிஸ் ஸ்பில் பேகன் என்ற ஒல்லாந்த நாட்டுத் தூதுவன் கண்டி மன்னன் 1 ஆம் விமலதர்ம சூரியனை கண்டியில் சந்தித்ததோடு ஆரம்பமானது. இச் சந்திப்பே ஒல்லாந்தரின் இலங்கை வருகைக்கான கதவுகளைத் திறந்துவிட்ட முதல் நிகழ்வாகும்.

கி.பி. 1638 இல் இலங்கை மன்னனாக இருந்த 2 ஆம் இராஜசிங்கன் போர்த்துக்கேயரை இலங்கை யில் இருந்து வெளியேற்ற வேண்டுமாயின், வலிமை மிக்க கடற்படை ஒன்றின் தேவை அவசியம் என்பதை உணர்ந்தான். இதற்காக ஒல்லாந்தருடன் தொடர்பு கொண்டு ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண் டான். எனினும், இது வெற்றியளிக்கவில்லை. மன்னனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. எது எப்படி இருப்பினும், ஒல்லாந்தர் இலங்கையில் நுழைவதற்கு இது காரணமாக அமைந்தது.

கி.பி. 1652 இல் ஒல்லாந்தருக்கும் போர்த்துக் கேயருக்குமிடையில் யுத்தங்கள் ஆரம்பமாயின. இதன் விளைவாக அங்குருவாதொட, களுத் துறைக் கோட்டைகள் ஒல்லாந்தரால் கைப்பற்றப் பட்டன. கி.பி. 1656 இல் கொழும்பும் கி.பி. 1658 இல் மன்னாரும் யாழ்ப்பாணமும் ஒல்லாந்தர் வசமாயின. கி.பி. 1658 இல் கரையோரங்களில் நிலவிய போர்த்துக்கேயர் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டது.

கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகு தியைப் பொறுத்தவரையில் கீழைத்தேய நாடுகளின் வணிகப் பொருட்களை ஐரோப்பிய சந்தைக்கு எடுத்துச் செல்வதில் ஒல்லாந்தரே பிரதான இடம் வகித்தனர். ஒல்லாந்தர்கள் தமது வணிக விருத்திக்காக உருவாக்கிக் கொண்ட ஐக்கிய கிழக்கிந்தியக் கம்பனி எனும் வணிக நிறுவனம் பலம் மிக்க சக்தியாகத் திகழ்ந்தது. இதுவே இலங்கை, கிழக்கிந்தியத் தீவுகள் அனைத்தையும் ஒல்லாந்தர் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது.

ஒல்லாந்தர் காலப் பகுதியில் முஸ்லிம்களின் குடியேற்றம் பரவலாக இருந்தது. போர்த்துக்கே யரைப் போலவே ஒல்லாந்தரும் முஸ்லிம்களைத் தமது சமய, வணிக எதிரிகளாகவே கருதினர். எனினும், போர்த்துக்கேயர்களைப் போன்று மிகக் கடுமையான அடக்குமுறைகளை ஒல்லாந்தர் கைக்கொள்ளவில்லை. கிழக்கிந்தியத் தீவுகளில் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் கடைப் பிடித்த கொள்கை காலத்துக்குக் காலம் அவர்களது தேவையைப் பொறுத்து மாற்றமடைந்தது.

ஒல்லாந்தர் இலங்கையில் பிரவேசித்த ஆரம்ப காலப் பகுதியில் போர்த்துக்கேயரிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையினாலும் கண்டி அரசனுடன் முறுகல் நிலையில் இருந்ததனாலும் முஸ்லிம்களு டன் அவதானமாகவே நடந்து கொண்டனர். 1640 இல் காலி, மாத்தறை பிரதேசங்களில் ஒல்லாந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்கம் நிலவியது. எனினும், அவர்கள் உறுதியாக காலூன்றியிருக்கவில்லை. இதற்காக அவர்கள் முஸ்லிம்களின் ஆதரவை வேண்டினர். காலிக் கோட்டை அவர்கள் வசமிருந்ததன் காரணமாகவும், வலிமை மிக்க கடற்படை அவர்களிடம் இருந்த மையினாலும் முஸ்லிம்கள் அவர்களுக்கு ஆதரவாக செயற்பட நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதுவே 1643 இல் மாத்தறை முஸ்லிம்கள் 300 பேரை போர்த்துக் கேயர் படுகொலை செய்யக் காரணமாகியது.

ஒல்லாந்தர்களும் முஸ்லிம்களோடு நட்புறவு பாராட்டி நடந்து கொள்ளவில்லை. முஸ்லிம்களை அவர்கள் சமய, வணிக எதிரிகளாகக் கருதியமையும் கண்டி இராச்சியத்துடன் அவர்கள் வணிக உறவு கொண்டிருந்தமையும் இதற்கு பிரதான காரணி களாகும். கண்டி இராச்சியத்தின் உள் பகுதிகளுக்கும் சென்று வணிகம் செய்யும் உரிமை முஸ்லிம்களுக்கு இருந்தது. இதனால் வெறுப்படைந்த ஒல்லாந்தர் 1659 இல் காலி, மாத்தறை, வெலிகமை முதலிய பிரதேசங்களில் இருந்து முஸ்லிம்கள் வணிக நோக்கங்களுக்காக வெளியே செல்லக் கூடாது என கட்டளையிட்டனர். இதனால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் ஆளுநருக்கு செய்த முறைப்பாட்டை அடுத்து காலி கவுன்ஸில் செயலாளரின் விஷேட அனுமதியைப் பெற்றே செல்ல வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

பல வகைகளிலும் முஸ்லிம்கள் பொருளாதார ரீதியில் வளம் பெறுவதைத் தடுக்க ஒல்லாந்தர் நடவடிக்கை எடுத்தனர். 1650 இல் நெசவுத் தொழில் மூலம் முஸ்லிம்கள் அதிக இலாபமீட்டுவதனைக் கண்ட மயோட்ஸயுகர் எனும் ஒல்லாந்த அதிகாரி தையல் தொழில் பறங்கியருக்கு மாத்திரம் உரியது என பிரகடனப்படுத்தினான்.

இலங்கையில் ஒல்லாந்த அதிகாரியாக பணி புரிந்த ரைகிலோப் வான்குவான்ஸ் எழுதிய



**"Memories of Vangovens"** எனும் நூல் ஒல்லாந்தர் கால இலங்கை பற்றியும் இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான ஒல்லாந்தர் நிலைப்பாடு பற்றியும் விளக்குகின்றது. இந்நூலில் வான்குவான்ஸ் முஸ் லிம்கள் உள்நாட்டு வியாபாரத்தில் ஈடுபடுவதை விட்டும் அவர்களை திசை திருப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தன்னைத் தொடர்ந்து வரும் அதிகாரிக்கு வழங்கும் ஆலோச னைக் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

அவற்றில் முக்கியமான குறிப்புக்கள் வருமாறு:

1. எமது வர்த்தகக் கம்பனிக்கு இலாபம் தரும் தொழில்களில் ஈடுபடாத முஸ்லிம்கள் வறிய வர்களாகவே நடாத்தப்பட வேண்டும். அவர் களிடமிருந்து கம்பனி வரி அறவிடக் கூடிய வகையில் அவர்களைப் பயன்படுத்த வேண்டும்
2. வளவ கங்கைக்கும் களுகங்கைக்கும் இடைப் பட்ட பகுதியில் விவசாயத்தில் ஈடுபடும் முஸ்லிம் களிடமிருந்தும் வரி அறவிடப்படல் வேண்டும்.
3. இவர்கள் அல்லாத பெரும் வணிகர்களை, கடல் கடந்து வாணிபத்தில் ஈடுபடுபவர்களை, தேசிய வணிகத்தில் முக்கியம் பெறுபவர்களை மிகக் கவனமாக நோக்க வேண்டும். இவர்களே எமது பிரதான எதிரிகளாவர்.

வான்கவான்ஸ் தரும் இக்குறிப்புக்கள் முஸ்லிம் களோடு ஒல்லாந்தர்கள் மிகவும் அநீதமாக நடந்து கொண்டமையையும் முடியுமான அளவு முஸ்லிம் களின் வளத்தை அபகரித்துக் கொள்வதில் காட்டிய ஈடுபாட்டையும் காட்டுகின்றன. இந்த கருத்துக்கள் அனைத்தினதும் விளைவாக கி.பி. 1659 இல் முஸ்லிம் களுக்கு எதிரான வணிகத் தடைகள் ஒல்லாந்தர் களால் அறிமுகப்படுத்தப்பட்டன. இறைச்சி வியா பாரம், பேக்கரி தொழில் என்பன கிறிஸ்தவர்க ளுக்கு மட்டும் உரியதென்றும் தையல் தொழில் முஸ்லிம்கள் ஈடுபடக் கூடாதென்றும் விதிக்கப் பட்டன. வெளிநாட்டு வணிகத்தில் உப்பு வியா பாரத்தில் ஈடுபடும் முஸ்லிம்கள் பறங்கியர் களை பங்குதாரர்களாகக் கொள்வது கட்டாய மாக்கப்பட்டது. முஸ்லிம்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் துணிகளுக்கு 10% வரியும் பறங்கியர்கள் கொண்டு வருவதற்கு 5% வரியும் விதிக்கப்பட்டது. எனினும், முஸ்லிம்களுக் கென்று தனியார் சட்டக் கோவை ஒன்றை அறி முகப்படுத்தியமை ஒல்லாந்தர் முஸ்லிம்களுக்கு செய்த வரலாற்று நன்றியாகக் குறிக்கப்பட வேண்டியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

காற்றில் கரைந்து வந்த செய்தி கன்னத்தில் ஓங்கி அறைந்தது.

யாராலும் அந்தச் செய்தியை அவ்வளவு சீக்கிரமாக ஜீரணிக்க முடியாது போகும். செய்தியின் வலியைத் தாங்க முடியாத அம்ஜத் அதே இடத்தில் உட்கார்ந்து அழத் துவங்கி விட்டான். மற்றவர்களின் கன்னங்கள் கூட கால்வாயாகி விட்டிருந்தன.

''வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த லுக்மான் மௌத்தாகிட்டானாம்...''

செய்தி கேள்விப்பட மொத்த ஊருமே சோகத்தில் முடங்கியது. சந்திப்பவர்கள் எல்லோருமே அந்தச் செய்தியையே சோகத்துடன் பரிமாறிக் கொண்டிருந்தனர். எல்லோருடைய விழிகளிலும் அதிர்ச்சியும் ஆழ்ந்த இரங்கலும் தொக்கி நின்றன.

இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் டெங்கு காய்ச்சல் என லுக்மானை வைத்தியசாலையில் அனுமதித்திருந்தார்கள். பயப்பட எதுவுமில்லை. இன்னும் கொஞ்ச நாட்களிலயே குணமாகி வீடு வந்து சேர்ந்திடுவான் என வைத்தியர்கள் நம்பிக்கை தந்ததால் அவனை பற்றி யாரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆனாலும், கழா கத்ரைப் பற்றி யாருக்குத் தெரியும்? மரணம் என்ற உண்மை எப்போதும் எவருக்கும் எந்த வடிவிலும் வரலாம் என்பதுதானே நிஜமான யதார்த்தம்!

லுக்மானின் ஜனாஸாவில் கலந்து கொள்ளச் சென்ற போதுதான் அவனது நண்பர்களுக்கு லுக்மானுக்கு ஏன் டெங்கு வந்தது எனப் புரிந்தது. வீட்டைச் சூழ தேங்கி நின்ற சாக்கடையும் ஆங்காங்கே குவிந்திருந்த குப்பை மேடுகளும் அவற்றில் படுத்துக் கொண்டிருந்த சொறி நாய்களும் பார்ப்பவரை அருவருப்பால் முகஞ்சுளிக்க வைத்தன.

''இவ்வளவு குப்பைக்குள் அவன் எப்படி வாழ்ந்தானோ தெரியாது!'' என ஸைன் அங்கலாய்த்தான்.

✍ ராஹிலா ஸைத்தூன்

# இனியொரு விதி செய்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் பகுதி
யாழ்ப்பாண பொது நூலகம்

''இந்த மாதிரி குப்பைக்குள் வாழ்ந்தால் டெங்கு என்ன, உலகத்தில் உள்ள அனைத்து நோய்களும் வந்து அப்பிக் கொள்ளும்'' என்றான் அகீல்.

''எது எப்படியோ லுக்மான் இனி நம்மிடம் திரும்பி வரப் போவதில்லை. ஆனால், நாம் லுக்மானை இழந்ததுபோல இனி யாரும் தம் நண்பர்களை இந்த டெங்கினால் இழந்து விடக் கூடாது'' என்றான் சினான்.

அதற்கு நாம் என்ன செய்யலாம் என்ற கேள்விக்குறியுடன் எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

ஈமானின் பாதி சுத்தம் எனச் சொல்லும் மார்க்கம் இஸ்லாம். ஆனால், அதே இஸ்லாத்தைப் பின்பற்றும் நம்மிடம் அந்தச் சுத்தம் இல்லையென்றால் என்ன நியாயம் ஒவ்வொரு முறையும் டெங்கு தீவிரமாக பரவும்போதும் ''சூழலை சுத்தமாக வைத்திருங்கள்'' என அரசாங்கம் வீதிக்கு வீதி பிரசாரம் செய்கிறது. ஆனால், நாமோ இன்னும் நமது சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதில் அசட்டையாகத்தான் இருக்கிறோம். எனவே, ''நாமே இந்தச் சூழலை சுத்தம் செய்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாக அமைவோம்'' என்றான் சினான்.

அவன் சொன்னது எல்லோருக்கும் பிடித்திருந்தது. அடுத்த நாளே எல்லோரும் தமது நண்பர்களை இணைத்துக் கொண்டு சிரமதானத்திற்கு வர வேண்டும் என முடிவு செய்து கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள்.

அடுத்த நாள் புலர்ந்தது.

லுக்மானுடைய நண்பர்கள் ஆளுக்கொரு ஆயுதங்களுடன் புறப்பட்டு வந்தார்கள்.

முதலில் எல்லோரும் சேர்ந்து ஆங்காங்கே குவிந்திருந்த குப்பைகளை சுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். வீட்டுக் கழிவுகள், இறப்பர் பொருட்கள், பொலித்தீன்கள் என பாதைகள் முழுவதும் குப்பைகள் நிரம்பிக் கிடந்தன. அவற்றில் ஒரு பகுதி சாக்கடைக்குள் விழுந்து அதை அடைத்துக் கொண்டிருந்ததால் சாக்கடை தேங்கி நின்று நாறிக் கொண்டிருந்தது.

முதலில் எல்லோரும் ஒன்று சேர்ந்து அவற்றில் உக்கக் கூடிய இயற்கை கழிவுகளை குழிவெட்டி புதைத்து விட்டு மற்ற குப்பைகளை ஒன்று சேர்த்து மாநகர சபை குப்பை வண்டியை அழைத்து அவற்றையும் அகற்றினார்கள்.

அடுத்த பெரிய வேலை சாக்கடையை சுத்தம் செய்வது. ஆனால், எமது இளைஞர்கள் நினைத்தால் எதைத்தான் அவர்களால் சாதிக்க முடியாது!

சாக்கடையில் விழுந்து அடைத்து கொண்டிருந்த குப்பைகளையும் அகற்றி ஆங்காங்கே நீர் தேங்கி நின்ற பள்ளங்களையும் மண் போட்டு மூடினார்கள். இளநீர் கோம்பைகளையும் துண்டு துண்டாக நறுக்கி ஆங்காங்கே பொடுபோக்காக வீசப்பட்டிருந்த டயர்களையும் துளையிட்டு நீர்தேங்கி நிற்காமல் செய்தார்கள்.

அந்திமாலையான போது அப்பிரதேசமே தலைகீழாக மாறி விட்டிருந்தது.

அசுத்தங்கள் அரசோச்சிக் கொண்டிருந்த குப்பை மேடுகளையோ, குமட்ட வைத்துக் கொண்டிருந்த சாக்கடை கசிவுகளையோ அங்கே காண முடியவில்லை. அனைத்து பக்கமும் சுத்தமே காணப்பட்டது. அதைக் கண்ட பெரியவர்களுக்கோ தாங்க முடியாத ஆச்சரியம். வழமையாக அரட்டையடித்துக் கொண்டும் வீணாக பொழுதுபோக்கிக் கொண்டும் இருக்கும் இளைஞர்கள் செய்த இந்த மகத்தான பணியை நினைத்து உண்மையிலயே அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

ஆனால், அதுதான் இளைஞர்கள். அவர்கள் நினைத்தால் ஊரில் உள்ள குப்பைகளை மாத்திரமல்ல, நாட்டில் உள்ள குப்பைகளையும் நொடிப்பொழுதில் குழிதோண்டிப் புதைத்து விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# கடல்கள்தான் கரைகளுக்கு கட்டுப்படும்...! கனவுகளல்ல...!

'நாஸா ஆய்வுகூடத்தில் இணைந்து தாய்நாட்டுக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்ப்பதே தனது எதிர்கால இலக்கு' என எஸ்.ஏ. முஹம்மத் ஆதிப் குறிப்பிடுகிறார். அவரது கண்களில் நம்பிக்கை ஒளி பிரகாசிக்கக் கூறிய தருணத்தை இன்னும் எம்மால் மறக்க முடியவில்லை. வல்ல நாயன் அவரது கனவுகள் நிஜமாக அருள் புரிய வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் அவருடன் மேற்கொண்ட நேர்காணலை இங்கு தருகின்றோம்.

அயாத் அஹமட்

இவ்வாறான சாதனை இளைஞர்களை சந்திக்கும் போது எமக்கும் ஓர் உண்மை புலப்படுகின்றது. நாம் கோடிப் பேருக்குள் ஒருவராக வாழ்ந்துவிட்டு மறைய இங்கு வரவில்லை, கோடி மக்களுக்கு உதவவே வந்துள்ளோம்.

**அகரம்:** உங்களைப் பற்றிய சிறிய அறிமுகம் ஒன்றைத் தாருங்கள்...

**எஸ்.ஏ. முஹம்மத் ஆதிப்:** எனது தந்தை ஷம்ஸூல் ஆரிபீன் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக செயற்பட்டார். அவர் எனக்கு பத்து வயதாக இருக்கும்போது காலம் சென்று விட்டார். தாய் முபீதா ஜெஸ்மின். அவர்தான் இப்போது எனக்கு அனைத்துமாக இருந்து, என் வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றார்.

ஆரம்பக் கல்வி தரம் ஒன்பது வரை அல்ஹிலால் வித்தியாலயத்தில் பூர்த்தி செய்துவிட்டு, உயர் தரத்தின் முதலாம் வருடம் வரை கல்முனை ஸாஹிரா கல்லூரியில் தொடர்ந்து விட்டு, தற்போது உயர் தரத்தின் இரண்டாம் வருடத்தை குருணாகல் அல்மதீனா தேசிய பாடசாலையில் கற்றுக் கொண்டிருக்கிறேன்.

நான் கிழக்கு மாகாணத்தின் சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்தவன்.

**அகரம்:** உங்கள் கண்டுபிடிப்புக்களை சற்று அறிமுகம் செய்ய முடியுமா?

**எஸ்.ஏ. முஹம்மத் ஆதிப்:** சிறு வயதிலிருந்தே விளையாட்டு ரீதியாக சில கண்டுபிடிப்புக்களை செய்வது எனது வழக்கமாக இருந்தது. ஆனால், இதே துறையில் எனது எதிர்காலம் ஒளிரும் என்பதை நான் கற்பனை செய்திருக்கவில்லை.

தொலைபேசி மூலம் இயக்கப்படும் வாயிற் கதவு கட்டுப்பாட்டுக் கருவி எனது முதலாவது கண்டுபிடிப்பு. ஏற்கனவே வாயிற்கதவை Remote Control மூலம் கட்டுப்படுத்தக் கூடிய அதாவது, திறக்கவும் மூடவும் கூடிய வசதிகள் காணப்பட்டாலும் அதில் அடையாளப்படுத்தப்பட்ட சில விமர்சனங்கள் நான் இக்கண்டுபிடிப்பை செய்ய காரணமாய் அமைந்தன.

Remote Control மூலம் வாயிற் கதவை இயக்குவது இலகுவான காரியமாக இருந்தாலும் அது ஒரு மேலதிக கருவியாகும். அதனால் அதை சதாவும் கைகளில் வைத்துக் கொண்டிருப்பது சிரம சாத்தியமான ஒரு விடயமாகும். ஆனால், எப்போதும் நமது கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் தொலைபேசியில் இந்தக் கட்டுப்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிமுறையை உட்புகுத்துவது அனைவருக்கும் இலகுவாக அமையும்.

இன்ஷா அல்லாஹ் 2017 ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்ட எனது சொந்த நிறுவனத்தின் ஊடாக இந்தக் கண்டுபிடிப்பை விற்பனை ரீதியில் சந்தைக்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல, தொலைபேசியை நீண்டநேரம் தொடர்ந்து பாவிப்பதன் ஊடாக அது பழுதடையும் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. எனவே, இதை தடுப்பதற்காக phone cooling system ஒன்றையும் கண்டுபிடித்துள்ளேன்.

அதேபோல, புதிய வகை ஜெனரேட்டர் முறை மற்றும் சூரிய ஒளியை வினைத்திறனாகப் பயன்படுத்தி அதிகளவு மின்சாரத்தை பெற்றுக் கொள்ளும் இன்னொரு பயனுள்ள முறையையும் கண்டு பிடித்துள்ளேன்.

**அகரம்**: எவ்வாறு இந்த துறைக்குள் நுழைந்தீர்கள்?

**எஸ்.ஏ. முஹம்மத் ஆதிப்**: சிறிய வயதுகளில் எனது விளையாட்டுக்களாக கண்டுபிடிப்புக்களே அமைந்திருந்தன. இந்த வகையில் தரம் ஐந்தில் கற்கும்போது ஷூ பொலிஷ் பண்ணும் ஒரு கருவியைக் கண்டுபிடித்தேன். விளையாட்டாக நான் செய்த அக்கருவிக்கு என்னைச் சூழ இருந்தவர்கள் தந்த ஊக்குவிப்பும் பாராட்டுதல்களும் என்னுள் ஒரு புதிய உத்வேகத்தை தந்தன; இந்தத் துறையில் தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை எனக்குள் விதைத்தன. இதற்கு ஆர்வத்தின் இன்னொரு வடிவமாகத்தான் தரம் 10 இல் கற்கும்போது power bank இனை கண்டுபிடித்தேன்.

எனது ஆர்வத்திற்கு பாடசாலையில் கற்ற செய்முறை தொழிநுட்பவியல் பாடமும் உயர் தரத்திற்காக நான் தெரிவு செய்த தொழிநுட்பவியல் துறையும் மிகவும் உறுதுணையாக இருக்கின்றன. எனது முயற்சிகளுக்கு எனது தாயும் அவரது சகோதர, சகோதரிகளும் தந்தையின் சகோதர, சகோதரிகளும் அவர்களின் பிள்ளைகளும் பெரிதும் துணை புரிகின்றார்கள். எனது சாய்ந்தமருது மக்களும் என்னை தாராளமாக ஊக்கப்படுத்துகின்றார்கள். ஆனாலும், ஒரு சிலர் எனது முயற்சிகளை கேலிக் குள்ளாக்காமலும் இல்லை. ஆனால், அவற்றை சவால்களாக எடுத்து சாதிக்கத் துடிக்கும் மனப் பக்குவத்தை அல்லாஹ் எனக்கு தந்துள்ளான், அல்ஹம்துலில்லாஹ்.

**அகரம்**: உங்கள் எதிர்கால இலக்கு என்ன?

**எஸ்.ஏ. முஹம்மத் ஆதிப்**: அமெரிக்காவின் நாஸா நிறுவனத்தில் பணி புரிய வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும். எட்டாம் ஒன்பதாம் தரங்களில் படிக்கும்போது என் ஆழ்மனதில் ஊடுருவிய இந்த இலக்கு இன்னும் எனக்குள் புது மின்சாரமாய் பாய்ந்து சுறுசுறுப்பை பரிசளித்துக் கொண்டிருக்கிறது. அதேபோல, இலங்கையின் சொந்தத் தயாரிப்பாக சிறிய ரக செய்மதியொன்றை விண்ணுக்கு ஏவும் இலக்குடன் அதனை வடிவமைக்கும் பணிகளில் தற்போது மூழ்கியுள்ளேன். ஒரு மாபெரும் செயற்திட்டமான இந்த பயணத்திற்கு அதிகமான உதவிகள் தேவைப்படுகின்றன.

**அகரம்**: அகரத்தின் தம்பி தங்கைகளுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**எஸ்.ஏ. முஹம்மத் ஆதிப்**: சாதிக்கத் துடிக்கும் பலர் விடுகின்ற ஒரு தவறு தமது ஆர்வத்திற்கேற்பவும் ஆற்றலுக்கேற்பவும் தமக்கான ஒரு துறையைத் தெரிவு செய்யாமல் அடுத்தவர்களின் சாதனைகளை வைத்து தமக்கான துறைகளை தெரிவு செய்வதாகும்.

ஒருவரின் இயலுமை விளையாட்டுத் துறையாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அவர் தனது சாதனைக்கான களமாக விளையாட்டுத் துறையைத்தான் தெரிவு செய்ய வேண்டும். ஒருவரின் திறமைகள் அறிவியல் துறையில் அமைந்திருந்தால் அவர் தனது துறையாக விளையாட்டுத் துறையை தெரிவு செய்யக் கூடாது. மாறாக, அறிவியல் துறையைத்தான் தெரிவு செய்ய வேண்டும்.

அதேபோல, நாம் எமது இலக்கை நோக்கிப் பயணிக்கும் சந்தர்ப்பத்தில் அனைவரும் எமக்கு பாராட்டி ஒத்துழைப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. மாறாக, எம்மை கேலி செய்பவர்களின் கிண்டல்களை நினைத்து மூலையில் முடங்காது தைரியமாக முன்னேறிச் செல்ல வேண்டும்.

**அகரம்**: இந்த தருணத்தில் மிக முக்கியமாக யாருக்கு நன்றி சொல்ல விரும்புகின்றீர்கள்?


**எஸ்.ஏ. முஹம்மத் ஆதிப்**: அளவற்ற அருளாளன்தான் அனைத்து நன்றிக்கும் புகழுக்கும் உரியவன். அதனைத் தொடர்ந்து எனது அன்புத் தாய் முபீதா ஜெஸ்மின் மற்றும் தாய் தந்தையருடைய சகோதர, சகோதரிகள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் மற்றும் எனது மதிப்புக்குரிய அதிபர்களும் ஆசிரியர்களும் நண்பர்களும் என நன்றி சொல்ல வேண்டியவர்களின் பட்டியல் நீளமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலி

# ITALY



ஜனாதிபதி
Sergio Mattarella



பிரதமர்
Matteo Renzi

'ஐரோப்பிய நாகரிகங்களின் தொட்டில்' என புகழப்படும் நாடு இத்தாலியாகும். தென் ஐரோப்பாவில் அமைந்திருக்கும் இந்த நாடு கால்பாதம் போன்ற அமைப்பிலான தீபகற்பத்தையும் மத்திய தரைக்கடல் பகுதிகளான சிலி மற்றும் சார்தீனியா தீவு பகுதிகளையும் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது.

ஆல்ப்ஸ் மலைத்தொடர், பிரான்ஸ், சுவிட்ஸர் லாந்து, அவுஸ்திரேலியா, சிலவேனியா ஆகியவை இத்தாலியின் எல்லைகளாகும். ஐரோப்பிய ஒன்றியம், ஜி 8, ஜி 20 போன்ற சர்வதேச அமைப்புகளிலும் இத்தாலி அங்கம் வகிக்கின்றது.

மொழி

இத்தாலியின் அரச மொழி 'இத்தாலி' மொழியாகும். சர்வதேச அளவில் 15 கோடி மக்களால் இம்மொழி பயன்படுத்தப்படுகின்றது.

சமயம்

கிறிஸ்தவம் இத்தாலிய மக்களால் அதிகளவு பின்பற்றப்படுகின்ற சமயமாகும்.

விளையாட்டு

கால்பந்து விளையாட்டில் இத்தாலி முன்னணி வகிக்கின்றது. கைப்பந்து மற்றும் கூடைப்பந்து போன்ற விளையாட்டுக்களும் இங்கு பிரபலமாக காணப்படுகின்றன.

வரலாறு

கி.மு. 800 ஆண்டளவில் இத்தாலியில் 'காமுனி' என அழைக்கப்பட்ட நாகரிகம் இருந்தமைக்கான தெளிவான சான்றுகள் காணப்படுகின்றன. 'பரோக்' என அழைக்கப்படும் மேற்கின் முக்கிய கலாசார வடிவங்களின் பிறப்பிடமாக இத்தாலியே திகழ்ந்தது. மத்திய கால ஐரோப்பாவில் இத்தாலி கலைகளின் பேரரசாக புகழ் பெற்றது.

19 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் ஆக்கிரமிப்பு நாடாக மாறிய இத்தாலி, ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் பல நாடுகளை ஆக்கிரமித்து காலனித்துவ ஆட்சியை மேற்கொண்டது.

தலைநகரம் - ரோம்

அரசாங்கம் - நாடாளுமன்ற குடியரசு

பரப்பளவு - 301,318 Km$^2$

மக்கள் - 5,913,1287 (2006)

நாணயம் - யூரோ



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## மீண்டும் வெற்றி பெற்ற டொனால்ட் டிரம்ப்

ஐக்கிய அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியை தீர்மானிக்கும் தேர்தல் கல்லூரி வாக்களிப்பில் ஹிலாரியை தோல்வியடையச் செய்து டொனால்ட் டிரம்ப் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். தேர்தல் கல்லூரியின் தேர்வாளர்கள் தமது வாக்குகளை ஹிலாரிக்கு மாற்றியளிக்கும் பட்சத்தில் டிரம்ப் ஜனாதிபதியாவதில் சிக்கல்கள் இருப்பதாக தகவல்கள் வந்த நிலையிலேயே ஹிலாரியை (224) விட அதிக வாக்குகளை பெற்று (304) அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக டிரம்ப் உறுதி செய்யப்பட்டுள்ளார். எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்காவின் உத்தியோகபூர்வ ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் பதவியேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## ஐ.நா. பொதுச் செயலாளர் பதவியேற்றார்



ஐக்கிய நாடுகள் சபையின் புதிய பொதுச் செயலாளராக தெரிவான ஆன்டோனியோ கட்டரஸ் கடந்த மாதம் பதவியேற்றார். ஐ.நா.வின் தற்போதைய பொதுச் செயலாளர் பான் கி மூனின் பதவிக் காலம் கடந்த 2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. புதிய பொதுச் செயலாளர் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் கடந்த ஒக்டோபர் 5 (2016) ஆம் திகதி நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.




தொகுப்பு: வ. முஹம்மத் நபீல்

## விண்வெளிக்கு சென்ற முதல் அமெரிக்க வீரரான ஜோன் கிலன் (JOHN GLENN) காலமானார்




95 வயதான இவர் உடல் நலக் குறைவால் கொலம்பஸில் உள்ள ஒரு புற்றுநோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் இறந்தார். இவர் கடந்த 1962 ஆம் ஆண்டு விண்வெளிக்கு சென்றார். அமெரிக்காவால் அனுப்பப்பட்ட முதலாவது விண்வெளி வீரர். விண்வெளி பயணத்தை முடித்து பூமிக்கு திரும்பிய அவர் 1974 ஆம் ஆண்டில் அமெரிக்க செனட் சபையின் ஜனநாயக கட்சி உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 36 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் 1998 ஆம் ஆண்டு விண்வெளி பயணம் மேற்கொண்டார். அப்போது அவரது வயது 77 என்பது குறிப்பிடத்தக்கது.

## உயிர் இழப்புக்கள்

2016 ஆம் வருடம் ரயிலில் மோதுண்டு 347 பேர் உயிரிழந்ததாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதில் 31 பேர் ஓடும் ரயிலுக்கு முன்னால் பாய்ந்து தற்கொலையில் ஈடுபட்டவர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிடல் காஸ்ட்ரோ காலமானார்

கியூபா முன்னாள் அதிபர் பிடல் காஸ்ட்ரோ தனது 90 ஆவது வயதில் காலமானார். உடல் நலக் கோளாறு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். கியூபாவில் ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் பிரதமராகவும் அதிபராகவும் பதவி வகித்தவர் பிடல் காஸ்ட்ரோ. வயோதிபம் காரணமாக தனது சகோதரர் ராவுல் காஸ்ட்ரோவிடம் கடந்த 2008 ஆம் ஆண்டு ஆட்சியை கையளித்து பிடல் காஸ்ட்ரோ ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. கியூபா பற்றி சில தகவல்கள்:

- தனியார் மருத்துவமனைகளே இல்லாத நாடு
- தனியார் பாடசாலைகளோ, கல்லூரிகளோ இல்லாத நாடு
- 6 முதல் 15 வயது வரை கட்டாய இலவசக் கல்வி
- நாடு முழுக்க மாணவர்களுக்கு ஒரே சீருடை
- 12 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர்
- அனைவருக்கும் இலவசக் கல்வி

2010 இல் யுனெஸ்கோ ஆய்வின்படி கியூபாவில் படிப்பறிவு சதவீதம் 99.8 ஆகும். தனியார் பாடசாலை அல்லது கல்லூரிகளே அங்கு கிடையாது; அவற்றுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

கியூபாவின் தொழில்நுட்பத் துறையில் பணி புரிபவர்களில் 70 சதவீதம் பேர் பெண்கள்தான்; ஆண்களுக்கு இணையான சம்பளம் அவர்களுக்கும் வழங்கப்படுகின்றது.

மருத்துவத்தில் கியூபா படைத்த சாதனை மகத்தானது. தனியார் மருத்துவமனைகளே இல்லாத நாடு கியூபா ஆகும். ''உலகின் மிகச் சிறந்த மருத்துவ சேவை வழங்கும் நாடு கியூபா'' என பிபிசி 2006 இல் அறிவித்தது. மகப்பேற்றின்போது தாய்மார்களின் இறப்பு வீதம் உலகிலேயே மிகக் குறைவு கியூபாவில்தான். உலகிலேயே எச்.ஐ.வி. பாதித்த நோயாளிகள் குறைவாக இருப்பதும் கியூபாவில்தான்.

2015 இல் 95 சதவீத கியூபா மக்களுக்கு சொந்த வீடுகள் இருந்தன. இன்று வீடில்லாத கியூபா மக்கள் யாருமில்லை. யாருக்கும் சொத்து வரி கிடையாது; வீட்டுக் கடனுக்கு வட்டி கிடையாது.

---

## இன்சி சீமெந்தின் புதிய முயற்சி

''இன்சி சீமெந்து'' என புதிதாக பெயர் மாற்றப் பட்டுள்ள ஹொல்சிம் சீமெந்து உற்பத்தி நிறுவனம், புத்தளம் மாவட்டத்திலுள்ள எழுவன்குளம் அருவக்காட்டில் வண்டுகள், ஊர்ந்துசெல்லும் பிராணிகள், பூச்சிகளை பாதுகாப்பான இடங்களுக்கு புலம்பெயர்க்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. புத்தளம் அருவக்காட்டில் சீமெந்து உற்பத்தி செய்வதற்காக இன்சி சீமெந்து நிறுவனத் தினால் (ஹொல்சிம்) சுண்ணாம்புக் கல் அகழ்வுக்கு தேவையான நிலப்பரப்பு, துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாறு காடுகளை அழித்து சுத்தம் செய்யும்போது அங்கு வாழும் மேற்படி உயிரினங் கள் அழிக்கப்படும் அபாயம் உள்ளது. இதனை கவனத்திற் கொண்ட மேற்படி அமைப்பினர் குறித்த உயிரினங்களை பிடித்து வாழக் கூடிய இடங்களில் மீண்டும் விடும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். இதனடிப்படையில் 7 ஆவது தட வையாக கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட குறித்த வேலைத் திட்டத்தில், மொறட்டுவைப் பல்கலைக்கழக சுற்றுச் சுழல் பீட மாணவர்களும் கலந்து கொண்டனர். இரண்டு நாட்களாக முன் னெடுத்து வந்த இந்த வேலைத் திட்டத்தில் முதல் நாள் அடையாளம் காணப்பட்ட குறித்த உயிரினங்கள பாதுகாப்பாக பிடிக்கப்பட்டதுடன், இரண்டாவது நாள் பாதுகாப்பான இடங்களில் விடப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடர்ந்த சவன்னா புல்வெளி அது.

வாழ்வுக்காக விலங்குகள் வருடம் முழுவதும் போராடுவதுதான் அங்கு வாழ்க்கை.

வானத்தில் வட்டமிட்டு வயிற்றை நிரப்ப அலைகிறது பருந்து.

தன் குஞ்சுகளுக்காக உயர்ந்த புற்களின் நுனியில் பூத்துள்ள பூக்களை கடும் சிரமப்பட்டு உயரத்தில் ஏறி சேகரிக்க முயன்று கொண்டிருகிறது தாய் எலி. திடீரென பருந்தின் பூதக்கண்ணாடி கண்களுக்கு எட்டுகிறது எலி. வட்டமிட்டுக் கொண்டிருந்த பருந்து எலியை நோக்கி இலக்கு வைத்து செங்குத்தாக அபார வேகத்தில் தரையை நோக்கி இறங்குகிறது.

பருந்துக்கு எலியை இரையாக்க இன்னும் ஒரிரு அடிகள் இருக்கின்ற நிலையில் புல்லின் தண்டு உடைந்து எலி தரையில் விழ்கிறது. எதிர்பார்க்காத விழுதலாலும் பலமான அடியினாலும் எலியின் உடலில் கடும் வலி ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால், விழுந்தவுடன் பருந்து தன்னை பதம் பார்ப்பதில் இருந்து தான் தப்பி விட்டதாக உணர்கிறது எலி. தப்பினேன் பிழைத்தேன் என எலிப்பொந்துக்குள் அடைக்கலமாகி விடுகின்றது அந்த எலி.

அது நேற்று பார்த்த இயற்கை சம்பந்தமான பிரபல காணொளி ஒன்றின் ஓர் அங்கம்.



# எலி சொல்லித் தந்த தோல்வி என்ற ஒரு பாடம்

நமது வாழ்க்கையில் அந்த எலியைப்போலவே பல தடவை நாமும் சறுக்கி விடுகிறோம். தோல்விகளைக் கண்டு விடுகின்றோம். பல இடங்களில் காயப்பட்டு விடுகின்றோம். அதன் பின்னர் நம்மையே நொந்து காலத்தைக் கடுமையாக குறை கூறுகிறோம்.

ஆனால், நாம் அவ்வாறான தோல்விகளை, காயங்களை பெறாமல் இருந்திருந்தால் உண்மையான வெற்றியை வாழ்க்கையில் தொலைத்திருப்போம்.

சில வலிகள், தோல்விகள், பாதிப்புக்கள், பின்னடைவுகள் இறைவன் புறத்தில் இருந்து நம்மை பாதுகாக்க நமது நல்லதுக்காக ஏற்படுகின்றன என்பதை எலியின் அந்த கதை வலியுறுத்துகிறது.

பல நேரங்களில் துஆக்களும் அப்படித்தானே....!!

நமக்கு கெடுதல் இருக்கும் என்று நாம் அறியாத சிலவற்றை கடுமையாக பிரார்த்தித்து கேட்கிறோம். அவை கிடைக்கவில்லை என்றதும் தளர்ந்து போய் 'எவ்வளவு துஆ கேட்டும் அது கிடைக்கவில்லை' என்று புலம்புகிறோம்.



கேட்ட அந்த விடயம் கிடைத்திருந்தால் நமக்கு ஏற்படுகிற நலனை விட தீயதே அதிகமாக இருந்திருக்கும் என்பதை எதிர்காலத்தை பார்க்க முடியாத நம் உள்ளங்களால் உணர முடிவதில்லை. நம்மைப் படைத்து பரிபாலிக்கும் இறைவனால் அதை பார்க்க முடிகிறது.

நாம் தோல்விகளையும் பின்னடைவுகளையும் வலிகளையும் கண்டு துவண்டு விடக் கூடாது.

எனவே, கிடைக்காத விடயங்களும் தோல்விகளும் நமக்கு ஏற்பட்ட நன்மைகளின் பிரதிபலிப்பே என்று உணருவோம்.

அல்லாஹ்வே நம்மை படைத்து பரிபாலிப்பவன்; அவனிடமே நாம் மீளவுள்ளோம்.

முஹம்மது ராஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்

## பாடம் 10

## கணினி தாய்ப் பலகை
## *Computer Motherboard*

ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட கணினிகளின் தாய்ப் பலகைகள் தற்போதுள்ள தாய்ப் பலகைகளைவிட சற்று வித்தியாசமாகவே காணப்பட்டன. அவற்றில் கணினி வன்தட்டுக்கள் **(hard disk)** பொருத்தப்பட்டிருக்கவில்லை. மாறாக, விசைப் பலகை **(keyboard)**, நாடா இயக்கி **(tape drive)** மற்றும் நெகிழ்வட்டு **(Floppy disk drive)** போன்ற புறக் கருவிகளே தாய்ப் பலகையுடன் இணைக்கப் பட்டிருந்தன.

1990 களில் இருந்து நுண்செயலிகளின் **(Microchip)** பயன்பாட்டுடன் தாய்ப் பலகைகளின் வடிவமும் உள்ளடக்கமும் மாற்றம் பெற்று இற்றைப்படுத்தப்பட்டது. 1995 களுக்குப் பிறகு **Intel** நிறுவனத்தின் நவீன கண்டுபிடிப்புக்களும் தொடர்ந்தேர்ச்சியான முயற்சியும் **Pentium** என்ற அதிவேக நுண்செயலிக் குடும்பத்தை வெளியிட வாய்ப்பாக அமைந்தன. **IDE** சாதனங்களான வன்தட்டுக்கள் **(hard disk)**, குறுவட்டுக்கள் ஆகியன தாய்ப் பலகையோடு ஒருங்கிணைக்கப்பட்டன.

**Pentium** குடும்பத்தில் **Pentium** க்குப் பிறகு **Pentium Pro** அறிமுகப்படுத்தப்பட்டது. **Pentium Pro, Celeron, Pentium II, Pentium III** ஆகியன சந்தையை அலங்கரித்தன. **Intel** நிறுவன உற்பத்திகளுக்குப் போட்டியாக சந்தையில் இடம்பிடித்த நிறுவனமாக **AMD** நிறுவனத்தைக் குறிப்பிடலாம். இந்நிறுவனம் **Athlon** என அழைக்கப்படும் தாய்ப் பலகைகளை உற்பத்தி செய்தது. இவை மலிவானவையாகக் காணப்பட்ட போதும் **Pentium** இற்கான செல்வாக்கும் கேள்வியும் சந்தையில் இன்றும் காணப்படுவதனை அவதானிக்க முடியும்.

நவீன தாய்ப் பலகைகளில் முக்கியமான அம்சம் மின்சாரத்தினை நிர்வகிக்கும் **(Power Management)** தன்மையாகும். இதற்கு உயரக உள்ளமைவு மற்றும் மின்திறன் இடைமுகம் **(Advanced Configuration and Power Interface-ACPI)** என்ற நெறிமுறை கையாளப்படுகின்றது. இதில் தாய்ப் பலகையிலுள்ள உறுப்புக்கள் மின்திறன் நிலைகளாக பிரிக்கப்பட்டு அவைகளிலுள்ள சில பகுதிகள் அல்லது முழுமையாக பயன்படுத்தாத நேரங்களில் அகல்நிலையில் **(powered-down state)** அனுப்பப்படுகின்றன.

**தாய்ப் பலகையில் பிரதானமாகக் காணக் கூடிய அம்சங்கள்**

1. Central Processing Unit (CPU)
2. Random Access Memory (RAM)
3. Basic Input/Output System (BIOS)
4. Complimentary Metal Oxide Semiconductor Random Access Memory (CMOS RAM)
5. Cache Memory
6. Expansion Bus
7. Chipset ,J Northbridge, Southbridge என இரு வகைப்படும். இவை கணினியின் ஏனைய பகுதிகளையும் **CPU** வையும் இணைக்கும் பணியினை மேற்கொள்கின்றது.
8. CPU Clock
9. Switches and Jumpers
10. Various ports



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினிச் சொற்கள் (Computer Acronyms)

இன்றைய கணினி உலகில் புதிய சொற்கள் அதிகம் அறிமுகமாகி வருகின்றன. எனினும், அதன் சுருக்கப் பெயர்களே இன்று புழக்கத்திற்கு வந்து பிரபல்யம் பெறுகின்றன. எனவே, அதன் முழுச் சொற்றொடர்களையும் மாணவர்கள் தெரிவதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

இச்சுருக்கங்களின் முழுச் சொற்றொடர்களையும் அறிந்து வைத்துக் கொள்ளல் அவற்றின் பொருளை எளிதாக விளங்கிக் கொள்ள வழிவகுப்பதோடு ஆங்கில சொல்வளத்தையும் அதிகரிக்கின்றது. மேலும் எளிதில் பிரசினங்களை கண்டறிந்து தீர்வுகளை வழங்குவதற்கும் வாய்ப்பாக அமையும்.

"RAM, PDF" போன்ற சுருக்கச் சொற்கள் எல்லோருக்கும் நன்கு பரிச்சயமான சொற்களாகும். இவற்றின் முழு சொற்றொடர்கள் பின்வருமாறு அமையும்.

RAM - Random Access Memory

PDF - Portable Document Format

இவ்வாறான கணினி சுருக்கங்களின் முழுச் சொற்றொடர்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**ADC** - *Analog-to-Digital Converter*
**ADSL** - *Asymmetric Digital Subscriber Line*
**AGP** - *Accelerated Graphics Port*
**ANSI** - *American National Standards Institute*
**API** - *Application Program Interface*
**ARP** - *Address Resolution Protocol*
**ASCII** - *American Standard Code for Information Interchange*
**ASP** - *Active Server Page or Application Service Provider*
**Bcc** - *Blind Carbon Copy*
**BIOS** - *Basic Input/Output System*
**BMP** - *Bitmap*
**CAD** - *Computer-Aided Design*
**Cc** - *Carbon Copy*
**CD** - *Compact Disc*
**CD-R** - *Compact Disc Recordable*
**CD-ROM** - *Compact Disc Read-Only Memory*
**CD-RW** - *Compact Disc Re-Writable*
**CDMA** - *Code Division Multiple Access*
**CMOS** - *Complementary Metal Oxide Semiconductor*
**CMYK** - *Cyan Magenta Yellow Black*
**CPU** - *Central Processing Unit*
**CRT** - *Cathode Ray Tube*
**DAC** - *Digital-to-Analog Converter*
**DBMS** - *Database Management System*
**DDR** - *Double Data Rate*
**DLL** - *Dynamic Link Library*
**DNS** - *Domain Name System*
**DOS** - *Disk Operating System*
**DPI** - *Dots Per Inch*
**DRAM** - *Dynamic Random Access Memory*
**DV** - *Digital Video*
**DVD** - *Digital Versatile Disc*
**DVD-R** - *Digital Versatile Disc Recordable*
**DVI** - *Digital Video Interface*
**FAQ** - *Frequently Asked Questions*
**GIF** - *Graphics Interchange Format*
**GPU** - *Graphics Processing Unit*
**GUI** - *Graphical User Interface*
**HDMI** - *High-Definition Multimedia Interface*
**HDTV** - *High Definition Televsion*
**HDV** - *High-Definition Video*
**HSF** - *Heat Sink and Fan*
**HTML** - *Hyper-Text Markup Language*
**HTTP** - *HyperText Transfer Protocol*
**HTTPS** - *HyperText Transport Protocol Secure*
**I/O** - *Input/Output*
**ICT** - *Information and Communication Technologies*
**IDE** - *Integrated Device Electronics or Integrated Devel opment Environment*
**IGP** - *Integrated Graphics Processor*
**IM** - *Instant Message*
**InterNIC** - *Internet Network Information Center*
**IP** - *Internet Protocol*
**ISA** - *Industry Standard Architecture*
**ISDN** - *Integrated Services Digital Network*
**ISO** - *International Organization for Standardization*
**ISP** - *Internet Service Provider*
**JPEG** - *Joint Photographic Experts Group*
**Kbps** - *Kilobits Per Second*
**KVM Switch** - *Keyboard, Video, and Mouse Switch*
**LAN** - *Local Area Network*
**LCD** - *Liquid Crystal Display*
**LED** - *Light-Emitting Diode*
**LPI** - *Lines Per Inch*
**MP3** - *MPEG-1 Audio Layer-3*
**MPEG** - *Moving Picture Experts Group*
**NIC** - *Network Interface Card*
**NTFS** - *New Technology File System*
**OASIS** - *Organization for the Advancement of Structured Information Standards*
**OCR** - *Optical Character Recognition*
**PC** - *Personal Computer*
**PCB** - *Printed Circuit Board*
**PDA** - *Personal Digital Assistant*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது வெற்றிக்கான வருடம்

வ. முஹம்மது நபீல்

## புதிய
### வருடம்
### வகுப்பறை
### பாடநூல்கள்

***கண்களில் படும் அனைத்தும் புதிது புதிதாக தோன்றி எமக்கு புத்துணர்ச்சியைத் தரும் அற்புத தருணம் இது. இனி வரும் நாட்கள் நிச்சயம் அழகாகத்தான் அமையும் என்ற அற்புத நம்பிக்கை எம் உள்ளத்தில் புன்னகையுடன் வலம் வந்து கொண்டிருக்கிறது. இந்த 2017 ஆம் ஆண்டு எமது வெற்றிக்கான ஆண்டுதான் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.***

***அடங்காத ஆவலைப் போன்றே திட்டமிட்ட முயற்சியும் எமது வெற்றிக்கு வழிகோலும்.***

1. Work and vest நேரத்தை பயனுள்ளதாக கழித்தலும் ஓய்வை வினைத்திறனாக மாற்றலும்
2. To-Do List
3. Prioritize Task
4. Be Realistic
5. Always with Allah

*2017 ஆம் ஆண்டை பயனுள்ளதாக கழிக்க இந்த சூத்திரங்களை நாம் பயன்படுத்தலாம்.*

அந்த இரண்டு விறகுவெட்டிகளின் கதை உங்களுக்கும் தெரிந்திருக்கும்!!!

அடர்ந்த வனமொன்றுள் நுழைந்த அந்த இரண்டு விறகுவெட்டிகளும் காய்ந்த மரங்களை வெட்டி வீழ்த்தத் துவங்கினர். வெயில் ஏற ஏற வியர்வையும் ஆறாய் பெருகி ஓடத் துவங்கியது. அதில் அதிக ஆர்வம் கொண்ட ஒருவன் விடாமல் வேலை செய்து கொண்டே இருந்தான். மற்றொருவனோ சிறிது நேரம் உட்கார்வதும் மீதி நேரம் வேலை செய்வதுமாக நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தான். அந்திமாலையில் புறப்படுவதற்காக இருவரும் விறகுக் குவியலை ஒன்று சேர்த்தபோது முதலாமவனுக்கு அங்கே ஆச்சரியமே காத்திருந்தது. அங்கே விடாமல் வேலை செய்தவனை விட இரண்டாமவன் வெட்டிக் குவித்த விறகுகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாமவன் தான் ஓய்வெடுக்க உட்கார்ந்த ஒவ்வொரு பொழுதிலும் வீணாக நேரத்தைக் கழிக்காமல் தன் கோடரியை கூர்மைப்படுத்தியதாலேயே அவனது விறகுக் குவியல் மிக அதிகமாக இருந்தது.

பாடசாலை மாணவர்களின் கல்விக்கு இந்த கதையை உதாரணமாக சொல்வார்கள். அவர்கள் வரட்டுப் பிடிவாதமாக சதாவும் படித்துக் கொண்டே இருந்தால் நேரம் போகப் போக தம்மையறியாமல் சலிப்பு ஏற்பட்டு, பெற்றுக் கொள்ளும் பயன் குறைந்து கொண்டே போகும். மறுபக்கம் பூரண ஓய்வுடன் நேரத்தைக் கழித்தால் பெற்ற பயன் பூச்சியமாகத்தான் அமையும். ஆகவே, கிடைக்கும் சந்தர்ப்பங்களில் முழு மனதையும் ஒன்று குவித்து கற்பதும் கிடைக்கும் ஓய்வு நேரங்களை வீணாக்காமல் கற்றலுக்காக எம்மைத் தயார் செய்வதும் அவசியமாகும்.

***To-Do List***

Date **A**

1. ..................................
2. ..................................
3. ..................................
4. ..................................

**B**

1. ..................................
2. ..................................
3. ..................................

இதில் **A** என குறிப்பிடப்பட்ட பட்டியலை முதல் நாளே பூர்த்தி செய்து கொள்ளுங்கள். **B** என்ற பட்டியலை அவ்வப்போது குறுக்கிடும் அத்தியாவசிய தேவைகளுக்காக ஒதுக்குங்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த பட்டியலின் அனைத்து விடயங்களையும் செய்து முடிக்காமல் படுக்கைக்கு செல்வதில்லை என உங்களுக்குள் ஒரு சவால் எடுத்துக் கொள்ளுங்கள். ''இன்றே உங்களால் செய்ய முடியுமானதை நாளை வரை தள்ளிப் போடாதீர்கள்'' என பெஞ்சமின் பிராங்கிளின் சொன்னதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

அதேபோல,

**Prioritize Task** - அவசியமானவற்றிற்கு முன்னுரிமை வழங்கல்

**Be Realistic** - வெறும் கற்பனை கனவுகளில் மாத்திரம் சஞ்சரிக்காது யதார்த்தங்களில் வாழ்தல்

**Always with Allah** - எப்போதும் எமதான ஏகனுடன் தொடர்பாக இருத்தல்

ஆகியனவும் 2017 ஆம் ஆண்டை எமது வெற்றி ஆண்டாக மாற்றும்.

**பராக்கு வேண்டாம்**

பண்டைய ரோம் நகரின் ஒரு பந்தயத்தில் இளவரசனும் இளவரசியும் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்கின்றார்கள். 'வெற்றி பெறுபவருக்கு அமைச்சு பதவி தருகிறோம்' என ஏற்கனவே அறிவித்திருந்ததால் இருவரும் இலக்கை நோக்கி மும்முரமாக ஓடிக் கொண்டிருந்தார்கள்.

பாதையில் ஆங்காங்கே ஏதோ பிரகாசிக்கின்றன. என்னவென உற்றுப் பார்த்தால் எல்லாம் தங்கக் கட்டிகள். எதையும் அலட்டிக் கொள்ளாத இளவரசன் ஓடி விட இளவரசி மாத்திரம் ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் தங்கக் கட்டிகளை பொறுக்க துவங்குகிறாள். அதனால் ஏற்பட்ட தாமதமும் அந்த கட்டிகளின் பாரத்தை சுமந்து கொண்டு ஓடுவதில் ஏற்பட்ட தாமதமும் அவளை தோற்கடித்து விட்டன.

இந்த கதை நாம் 2017 ஆம் ஆண்டை வெற்றி வருடமாக கழிக்க சில படிப்பினைகளை தருகின்றது. அவற்றில் முக்கியமானது கண் முன்னால் எட்டிப் பார்க்கும் அற்ப இன்பங்களுக்காக எதிர்காலத்தில் அடையப் போகும் பாரிய வெற்றியை இழந்துவிடக் கூடாது என்பதுவே.

இந்த வருடத்திலும் நமது கவனத்தை திசை திருப்ப எண்ணற்ற விடயங்கள் காத்திருக்கின்றன. அவை எவற்றிலும் அகப்படாது இலக்கை நோக்கி செல்பவன்தான் வெற்றியாளன் ஆகின்றான்.

**போதை வேண்டாம்**

போதை என்பது சிகரட், தூள் போன்றவாறான பொருட்கள் மாத்திரம் அல்ல. மாறாக, நாம் பிறந்ததிலிருந்தே எம்மோடு ஒட்டிக் கொண்ட எமது தோல்விகளுக்கு காரணமாக அமையும் எண்ணற்ற பல பழக்கங்கள் போதையாக எம்மிடம் கலந்திருக்கின்றன.

பிற்போடல், சோம்பல், பொடுபோக்கு, வீண் பதற்றம், நேர்த்தி இன்மை

என எண்ணற்ற போதைப் பழக்கங்கள் எம்மிடம் நிறைந்திருக்கின்றன. எவ்வளவு அதிகமாக நீர் நிரப்பினாலும் ஓட்டைக் குடங்கள் நிரம்புவதில்லை. அதேபோல கடினமாக முயன்றாவது இந்த போதைப் பழக்கங்கள் இருப்பின், அவற்றைகளைந்து விட்டு இந்த வருடத்தை வெற்றி வருடமாக கொண்டாடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விரைவு - உயர்வு - துணிவு




## பீபா தர வரிசையில் அர்ஜென்டினா முதலிடம்

பீபா கால்பந்து தர வரிசையில் அர்ஜென்டினா அணி 2016 ஆம் ஆண்டின் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. பிரேசில் 2 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. அர்ஜென்டினா இந்த ஆண்டில் 15 போட்டிகளில் விளையாடி 10 இல் வெற்றி பெற்றுள்ளது. கடந்த ஆண்டு முதல் இடத்தைப் பிடித்த பெல்ஜியம் 4 ஆவது இடத்திற்கு பின்தங்கியுள்ளது. பிரேசில் 2 ஆவது இடத்திற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. ஜெர்மனி 3 ஆவது இடத்திலும் பெல்ஜியம் 4 ஆவது இடத்திலும் சிலி ஐந்தாவது இடத்திலும் கொலம்பியா 6 ஆவது இடத்திலும் பிரான்ஸ் 7 ஆவது இடத்திலும் போர்த்துக்கல் 8 ஆவது இடத்திலும் உருகுவே 9 ஆவது இடத்திலும் ஸ்பெயின் 10 ஆவது இடத்திலும் உள்ளன.

---

## கரம் விளையாட்டை விரிவுபடுத்த திட்டம்

சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைவாக கரம் விளையாட்டை விரிவுபடுத்துவதற்கு விளையாட்டுத் துறை அமைச்சர் தயசிறி ஜெயசேகர நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். பொழுதுபோக்கான இந்த விளையாட்டின் சட்ட விதிமுறைகள் தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருவதாக விளையாட்டுத்துறை அமைச்சு குறிப்பிடுகிறது.

## 2016 ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. இன் சிறந்த வீரர்




2016 ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. இன் சிறந்த வீரராக இந்திய அணியின் ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்திய அணியின் சிறந்த முன்னணி சுழற்பந்து வீச்சாளரும் சகலதுறை துடுப்பாட்ட வீரருமான அஸ்வின் தமிழகத்தை சேர்ந்த வீரராவார்.

மேலும் இவர் சிறந்த டெஸ்ட் வீரர் விருதையும் வென்றுள்ளார். இந்திய அணியின் ராகுல் டிராவிட் (2004), சச்சின் டெண்டுல்கருக்கு (2010) பிறகு ஆண்டின் சிறந்த வீரர் விருதைப் பெறும் 3 ஆவது இந்தியர் அஸ்வின் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர் விருதுக்குரிய கால கட்டத்தில் 8 டெஸ்டில் 48 விக்கெட்டுகளும், 2 சதம் உட்பட 336 ஓட்டங்களும் எடுத்துள்ளார். ஒருநாள் போட்டியில் 27 விக்கெட்டுகள் கைப்பற்றி இருந்தார். மேலும் ஒரே ஆண்டில் இரண்டு விருதை பெறும் 2 ஆவது இந்தியர் என்ற பெருமையும் அஸ்வின் பெற்றார். இதற்கு முன்பு 2004 இல் ராகுல் டிராவிட் இரட்டை விருது பெற்றிருந்தார்.

## கராத்தே

- கராத்தே விளையாட்டின் தாயகம் - சீனா
- கராத்தே விளையாட்டு அறிமுகமான நாடு - ஜப்பான்
- கராத்தே கலையின் ஆரம்பம் - இந்தியா
- கராத்தேயின் பிரிவுகள் - சோட்டோ கன், ஷிட்டோ ரியூ, கோஜூரியு, வடுரியு
- கராத்தே தோ (Kara Te Do) எனும் ஜப்பானிய மொழி வளம் - வாழ்க்கைப் பாணி கரா-பொறுமை, தே - கை, தோ - வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 199 ஓட்டங்களில் முடிந்த ஆட்டங்கள்

கடந்த மாதம் இந்திய அணியின் லோகேஷ் ராகுல் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் 199 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். இது டெஸ்ட் விளையாட்டில அவரது அதிகபட்ச ஓட்டமாகும். டெஸ்ட் கிரிக்கெட்டில் 199 ரன்களில் ஆட்டம் இழந்த 2 ஆவது இந்தியர் லோகேஷ் ஆவார். ஏற்கனவே முன்னாள் கேப்டன் முகமது அசாருதீன் 30 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைக்கு எதிரான டெஸ்டில் ஒரு ரன்னில் இரட்டை சதத்தை நழுவ விட்டிருக்கிறார். அதுதான் அசாருதீனின் அதிகபட்ச ஓட்டமாக நீடிக்கிறது. 139 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இதுவரை 9 வீரர்கள் 199 ரன்களில் ஆட்டம் இழந்துள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு:

- லோகேஷ் ராகுல் - இந்தியா எதிர் இங்கிலாந்து (2016)
- ஸ்டீவன் ஸ்மித் - அவுஸ்திரேலியா மேற்கு இந்திய தீவுகள் (2015)
- இயான் பெல் - இங்கிலாந்து எதிர் தென் ஆபிரிக்கா (2008)
- யூனிஸ்கான் - பாகிஸ்தான் எதிர் இந்தியா (2006)
- ஸ்டீவ் வாக் - அவுஸ்திரேலியா எதிர் மேற்கிந்திய தீவுகள் (1999)
- சனத் ஜயசூரிய - இலங்கை எதிர் இந்தியா (1997)
- மேத்யு எலியாட் - அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து (1997)
- அசாருதீன் - இந்தியா எதிர் இலங்கை (1986)
- முடாசர் நாசர் - பாகிஸ்தான் எதிர் இந்தியா (1984)

*விளையாட்டுத் துறை வரலாற்றில் முதலாவது ஒலிம்பிக் போட்டி 1896 ஆம் ஆண்டு கிரீஸ் நாட்டில் உள்ள எதன்ஸ் நகரத்தில் நடைபெற்றது.*



## கிறிஸ்டியானோ ரொனால்டோ சாதனை படைத்தார்

போர்த்துக்கல்லை சேர்ந்த பிரபல நட்சத்திர கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ 2016 ஆம் ஆண்டுக்கான பாலன் டி ஓர் விருதினை வென்றுள்ளார். பிரான்ஸ் கால்பந்து ஒருங்கிணைப்பாளர்கள் பாரிஸ் நகரில் இந்த அறிவிப்பை வெளியிட்டனர். இந்த ஆண்டில் ரியல் மேட்ரிட் அணிக்காக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 31 வயதான ரொனால்டோ ரியல் மேட்ரிட் அணியுடன் சேர்ந்து சாம்பியன்ஸ் லீக் கோப்பையையும் போர்த்துக்கல் அணிக்காக விளையாடி ஐரோப்பிய சாம்பியன் ஷிப் கோப்பையையும் வென்றுள்ளார். கிறிஸ்டியானோ ரொனால்டோ 4 ஆவது முறையாக பாலன் டி ஓர் விருதினை வென்றுள்ளார். இருப்பினும், பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி 5 ஆவது பாலன் டி ஓர் விருது வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2016 ஆண்டிற்கான சிறந்த நடுவர் மாரிஸ் சுராஸ்மஸ்



ஐ.சி.சி. இன் 2016 ஆண்டிற்கான சிறந்த நடுவருக்கான விருதை மாரிஸ் எராஸ்மஸ் பெற்றுக் கொண்டுள்ளார். இவர் சிறந்த நடுவருக்கான கிரிக்கெட் சம்மேளனத்தின் விருதைப் பெறும் 5 ஆவது நடுவராவார். தென் ஆபிரிக்காவை சேர்ந்த மாரிஸ் எராஸ்மஸ் (52), கடந்த 2007ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற்ற கென்யா-கனடா அணிகளுக்கு இடையேயான ஒருநாள் போட்டியின் மூலம் அறிமுகமானவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சின்னவன்

நான் சின்னவன்
என் கனவுகள் பெரியன
கண்கள் சிறிதுதான்
என் பார்வைகள் பாரியன

நீலவானமே எல்லை
என் நீளும் ஆசைகள்
கால்கள் பறப்பதில்லை
என் சிறகுகளை பூட்டுங்கள்

எண்ணும் எழுத்துமே
என் இதயத் துடிப்புகள்
மருத்துவன் மாடி வீடு
என் கனவுகள் மலிவு அல்ல

யாரங்கே! என்
மறுமைப் பாதையை
மாற்ற நினைப்பது?

ஏ.எம். யூஹான்
கட்டுவன்வில

# தோழியே!



ஏழையாய் நான் இருந்தாலும்
ஏணியாய் என்றும் என்னுடன் நின்று
எப்போதும் தோள் கொடுத்தவளே!

காலங்கள் சிலபோது மாறலாம்
கால் தடங்கள் அழியலாம்
கால் தூசி கூட நம் நட்பிற்கு
களங்கம் இல்லாமல் இருக்க
வேண்டாமா?

பிரிவு என்பது வெறும் மூன்றெழுத்துச் சொல்லோ?
பரிவு பிரிந்தாலும் நட்பு எனும்
மூன்றெழுத்தை யாராலும் பிரிக்க முடியாது
தோழியே!

பாத்திமா ஹஸனியா
மே/மா/மது பலாந்தை முஸ்லிம் வி.
பலாந்தை

# என் பிறந்த நாள் என்னுள் மீட்டிய மஹ்ஷரின் உணர்வு

காலமோ செல்கின்றது
என் ஆயுள் குறைகின்றது
மரணமோ நெருங்குகின்றது
நான் இவ்வுலகில் என்ன செய்தேன்
தெரியவில்லை - ஏனென்றால்
'இன்று' என் பிறந்த நாள்




பல வருடங்கள் சென்று விட்டன
இவ்வளவு நாள் செய்ததுதான் என்ன?
நாளை மஹ்ஷர் மைதானத்தில் தலைநிமிர்ந்து
இருக்கப் போகிறேனா? அல்லது தலை குனிந்து
இருக்கப் போகிறேனா?
அதை நினைக்கும்போது இதயம் உருகுகின்றது
விடை தெரியாமல் விழிகள் கண்ணீர் சிந்துகின்றது...

அந்நாளில் என்னை விட்டு எல்லோரும்
ஓடுவார்களே!! பயமாய்
இருக்கிறதே...
யா அல்லாஹ்!!! நாளை மஹ்ஷர் மைதானத்தில்
எல்லோர் முன்னிலையிலும் வாலிபத்தை
எவ்வாறு கழித்தாய் என்று கேட்பாயே...?
நான் என்ன சொல்லப் போகின்றேன்...??

ஸரா பின்த் ஷரூக்
கல்ஹின்ன (கட்டப்பு)

## பேசும் கவிதை - இல 21



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 ஜனவரி 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதலிடம் பெற்ற கவிதை

### காவலரே!

நீர்
சூழ்ந்த தீவு
தீ சூழ்ந்த கதை
நேற்றோடு போகட்டும்...
தப்பி வந்தது வெண்புறா
காவலரே! கவனம்
மீளவும் வரலாம்
வெண்புறா திருடர்கள்

எம்.வை. கைஸ்
கட்டுவன்வில் ம.க.

### சுதந்திரக் கீற்று நம் சுவாசக் காற்று

பீரங்கி ஓசைகள் - எங்கும்
இரத்த ஓலங்கள்
பச்சிளம் குழந்தைகளின்
அவலங்கள்
அனைத்தும் ஓய்ந்து
முற்றுப் பெற்றன - இந்நாளில்
வளமிகு தேசத்தை
வீரத்தோடு வென்றெடுத்தோம்
இனி வேற்றுமைகள் இன்றி
ஈழ தேசத்தில்
இனிதாய் வாழ்வோம்...
சுதந்திரமாய்...

இம்னா இஸ்மாயில்
ரஹ்மானிய்யா ம.வி.
வெளிப்பன்ன

### யாருக்காக?

ஓ...
சிறகடிக்கும் சிங்கக் கொடியே
யாருக்காக சிறகடிக்கிறாய்?
உன்னை
நிலைநாட்டிய பெருமையில் உள்ள
சிப்பாய்களுக்காகவா - இல்லை நீ
சுதந்திரமாய் பறப்பதற்காக?

டீ. பாஹிம்
கொழும்பு - 13

## பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்

### மலர்ந்தது சமாதானம்

முடங்கிக் கிடந்தோம்
மூன்று தசாப்தங்கள்
வீடெங்கும் கண்ணி வெடி
நாடெங்கும் இரத்த வெள்ளம்
அலைந்தோம் தாய்நாட்டில் கூட
இடமின்றி தவித்தோம்
துயர் துடைக்க துள்ளி
வந்தார்கள் நம் இராணுவ வீரர்கள்

எம்.எஸ்.எம். சபீக்
வல்பாலுவ முஸ்லிம் ம.வி.
கல்கமுவ

### யுத்தம் வேண்டாம்

எம்முள் ஜாதி, மத வெறி வேண்டாம்
வெறி பிடித்த எண்ணம் வேண்டாம்
ஒரே மண்ணில் பிரிந்து
வாழும் வேற்றுமை வேண்டாம்
துப்பாக்கி ரவை கொண்டு
வேட்டையாடும் வன்முறை வேண்டாம்

எம்.என்.எம். நப்லான்
வல்பாலுவ முஸ்லிம் ம.வி.
கல்கமுவ

### புறப்படுகிறீரோ...?

ஈழ மண்ணில் அன்று
வீரப் போராட்டம் செய்த நீர்
இன்று... தீயால்
பாதி அழிந்த இஸ்ரேலின்
மறு பாதி அழித்து
பலஸ்தீனைக் காக்க
ஒன்றிணைந்த சகாக்களாய்
புறப்படுகிறீரோ...?

எம்.ஐ.எப். தஹ்ரா
கொலேதண்ட
வெலிகம

### காத்திருக்கும் ஏக்கம்

வாளேந்திய சிங்கக் கொடி
வானளாவப் பறக்க
உள்ளங்களில் ரணங்களோடு
கைகளில் ஏந்திய துப்பாக்கிகளோடு
தோள்கள் சுமந்த துப்பாக்கி ரவைகளோடு
குறிபார்த்திருக்கும் இளைஞர்களே!

பீ.எம்.எம். பாஸில்
நிக/அபுக்காகம மு.ம.வி.
முன்னேகுளம்

### சாதனையல்ல சரித்திரம்

சாதியில்லை பேதமில்லை
அனைவரும் ஒரு தாய் மக்கள்
என நிரூபித்து
விட்டாய் இது
சாதனையல்ல சரித்திரம்

ஜே. ஸமித் அஹமட்
தி/மு/அல் ஹிலால் ம.க.
மூதூர்

### ஆகா! நிம்மதி! அமைதி!

30 வருட யுத்தம்
நிதமும் தோட்டாக்களின் சத்தம்
விடியுமா என நாங்கள்
எதிர்பார்த்தது இரவையல்ல
யுத்தத்தின் அகோரத்தை
விழுந்து விட்டது
ஆகா! நிம்மதி! அமைதி!

ஜே. உமைர் அகமட்
தி/மூ/அஸ்ரப் வி.
மூதூர்

### புரட்சி

அடிமைப்பட்டு வாழும் நமக்கு
சுதந்திரம் உண்டென்று
நாளைகள் ஒவ்வொன்றும்
தன் பாட்டில் போகிறது
தான் தோன்றி சரித்திரம்
தரித்திரமாய் வாழ்வில்
நிலை பெறாமலிருக்க எம் எதிர்ப்பு
புரட்சியாக போகிறது!

எப். நுஹா சரூஜ்
கு/பறகஹதெனிய தே.பா.
குருநாகல்

### இராணுவமே நீ வாழ்க

இரத்த தாகம் பிடித்த
இரத்தத்தை கொடுத்து
எங்களை காத்த
இராணுவமே நீ வாழ்க
சிங்கக் கொடியை
பறக்க விட்டாயே!
ஓங்கட்டும்
உன் புகழ்
இலங்கையிலே

அஸ்கா ஜவாஹிர்
மூதூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஷதா அய்மன்

# ஆசிரியருக்கான கௌரவத்தையும் குழந்தைக்கான பராமரிப்பையும் பெற வேண்டிய பாடநூல்கள்...

''வாங்கிக் குவித்த மெடல்கள் வரேவேற்பறையில் அழகாக அடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவற்றைப் பெற்றுத் தந்த பாடநூல்கள் எங்கோ இருட்டு மூலையில் தூக்கியெறியப்பட்டுள்ளன.'' யதார்த்தமாக ஓர் உண்மையைச் சொல்கிறது வலியும் துயரமும் நிறைந்த இந்த வரிகள்.

இலங்கை கல்வி வரலாற்றில் மிகப் பெரும் திருப்பு முனையாக அடையாளப்படுத்தப்படும் 'இலவசக் கல்வி' என்ற வரப்பிரசாதத்திற்கான முயற்சிகள் 1931 ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து ஆரம்பித்து இலவச கல்வியின் தந்தை என புகழப்படும் கன்னங்கரா அவர்களால் 1945 ஆம் ஆண்டு வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டது.

இலவசக் கல்வியின் முக்கிய சலுகையாகவும் ஊக்குவிப்பாகவும் 1980ஆம் ஆண்டு இலவச பாடநூல்கள் வழங்கப்பட்டன. இதற்காக உருவாக்கப்பட்ட கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வருடாந்தம் பல மில்லியன்களை செலவு செய்து நமக்கான பாடநூல்களை அச்சிட்டுத் தருகின்றது.

பாடநூல் கருப்பொருட் பாடல்

மனதில் பூ பூத்திடும் புதிய புத்தகம்
வாசமே
கண்களில் காட்சி தோன்றும் எமது
உலகமே வெளிச்சமே!!
புத்தகம் அறிவு வரும் முகங்களில்
மகிழ்வு தரும்
புதிய புத்தகம் புதிய பொலிவு பெறும்
தினமுமே
புத்தகம் கண்கள் தானே அதை
காப்பது போலவே
அறிவைத் தரும் புத்தகங்களை
மகிழ்வுடன் காப்போமே
மனதில் பூ பூத்திடும் புதிய புத்தகம்!!!

பாடலாசிரியர் சரத் குமார பெரேரா இயற்றி இசையமைப்பாளர் மகேஷ் தெனிப்பிட்டிய இசையமைத்த பாடநூல்களை பத்திரப்படுத்தல் பற்றிய இந்த பாடல் உங்கள் பாடநூலிலும் இணைக்கப்பட்டுள்ளது.

பாடநூல்களுக்கு ஒரு தனியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவமும் இணையற்ற மதிப்பும் இருக்கின்றன. அவைதான் மௌனமாக எண்ணற்ற ஆளுமைகளை உருவாக்குகின்றன. எத்தனை தடவை திரும்ப திரும்ப கேட்டாலும் சலிக்காமல் நமக்கு பாடத்தை விளங்கப்படுத்துகின்றன. எனவே, இந்த ஒப்பற்ற பெரிய நண்பனுக்கு உரிய கௌரவத்தை வழங்க வேண்டியது எமது கடமையாகும்.

'பாடநூல்களுக்கு ஓர் ஆசிரியருக்கான கௌரவத்தை வழங்கி குழந்தைக்குரிய பராமரிப்பை வழங்க வேண்டும்' என எமது வகுப்பறைகளில் எமது ஆசிரியர்கள் எமக்கு கற்றுத் தந்திருப்பார்கள். அதை பின்பற்ற வேண்டியது எமது கடமையாகும்.

பாடநூல்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய முதலாவது கௌரவம் அதற்குப் பொருத்தமான மேலுறை இட்டு பாதுகாப்பதாகும்.

ஓய்வு நேரங்களில் வீசி விளையாட அவை விளையாட்டுப் பொருட்களல்ல. அவை எமது விதியை மாற்றும் வல்லமை கொண்டவை.

பாடநூல்களின் தாள்களை கிழிப்பதோ, மடக்குவதோ அநாகரிக செயல்களாகும்.

கல்வியின் அடையாளச் சின்னங்களாக இருப்பவை பாடநூல்கள். ஆகவே, கல்விக்கு நாம் வழங்கும் மரியாதையை பாடநூல்களுக்கும் வழங்க வேண்டும்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் இடிந்து விழுந்து நொறுங்கிப்போன ஜப்பான் தேசம் ஐம்பதே ஆண்டுகளில் அனைவரும் அண்ணார்ந்து பார்க்கும் அளவு உயரத்திற்கு எவ்வாறு சென்றது என்பதை ஆராய விரும்பிய அமெரிக்க ஆய்வாளர் ஒருவர் ஒரு தடவை ஜப்பானுக்கு சென்றார். தனது ஆய்வுக்கு முன்னால் அதிவேக புகையிரதத்தில் ஒரு சுற்று சுற்றிவிட்டு வரலாம் என ''காற்றை விட வேகமாக'' செல்லும் புகையிரத்தில் ஏறிக் கொண்டார்.

இவரின் இருக்கையின் எதிரே ஒரு ஜப்பானியர் தன் கையில் இருந்த ஊசி நூல் கொண்டு அவரது இருக்கையில் காணப்பட்ட கிழியலை மிகவும் சிரத்தையாக தைத்துக் கொண்டிருந்தார். நமது ஆய்வாளருக்கு ஆர்வத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

''யார் நீங்கள்? இந்த தொழிலை எத்தனை வருடங்களாக செய்கின்றீர்கள்?!'' என வினா தொடுத்தார். அதற்கு அந்த ஜப்பானியர் சிநேகிதமாக புன்னகைத்தவாறே பின்வரும் பதிலை எத்திவைத்தார்:

''ஐயா! புகையிரதத்தின் இருக்கைகளை சரி செய்வதல்ல எனது தொழில்...! நான் இந்நாட்டின் முக்கிய கம்பனி ஒன்றின் தலைமை அதிகாரி. நேற்று இந்த புகையிரதத்தில் செல்லும்போது இந்த கிழியலை கண்டேன். அதுதான் இன்று தைக்கின்றேன். எனது நாட்டு உடைமைகளை காப்பதுதானே எனது தலையாய கடமை'' என்றார்.

எவ்வளவு ஆழமான அர்த்தம் கொண்ட பதில் இது... இதன் இறுதி வரிகளை இன்னொரு தடவை வாசித்துப் பாருங்கள். ''எனது நாட்டு உடைமைகளை காப்பதுதானே எனது தலையாய கடமை''

ஜப்பானின் அசுர வளர்ச்சிக்கு காரணம் என்ன என்பதற்கான பதில் அந்த அமெரிக்கருக்கு மட்டுமல்ல, நமக்கும் கிடைத்து விட்டதுதானே!

புத்தகங்கள் எமது நாட்டின் சொத்துக்கள். அவற்றை பேணிப் பாதுகாப்பது எமது கடமை. மறுபக்கம் அவை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்கள். அவற்றில் ஏற்படும் ஒவ்வொரு குறைக்கும் நாம் மறுமையில் அல்லாஹ்விடம் பதில் சொல்லியே தீர வேண்டும்.

வாசிப்பை சுவாசிப்போம்


வாசிக்க வழிவகுக்கும் நூல்களை

நேசிப்போம்!

சரித்திரங்களை கற்றுத் தரும் நூல்கள்தான்

சரித்திரம் எம்மை திரும்பி பார்க்க வைக்கும்

சாதனையாளர்களாக்குகின்றன!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்


வினாப்பத்திரம் I



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில்,எம்.எம். முபாரக்


முதல் உருவிற்கு சமமான உருவைத் தெரிவு செய்க.

1.



i. ii. iii.

2.



i. ii. iii.


அடைப்புக்குள் இருக்கும் இரு கோலங்களையும் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

3.




i. ii. iii.

4.



i. ii. iii.

5. கீழுள்ள உருவில் எத்தனை முக்கோணிகள் உள்ளன?



i. 6
ii. 8
iii. 5

6. இரட்டை எண்கள் மாத்திரம் அமைந்துள்ள விடையினை தெரிவு செய்க.

i. 7, 8, 9, 10
ii. 30, 45, 73, 48
iii. 30, 78, 46, 70

□+△=8 எனவும் △-○=3 எனவும் தரப்பட்டுள்ளன.


7. ○இற்கு பொருத்தமான எண் யாது?

i. 4 ii. 2 iii. 1

8. △+○இற்கு பொருத்தமான பெறுமானம் யாது?

i. 5 ii. 7 iii. 4

9. தனது உடலை நாவினால் நக்கி சுத்தப்படுத்தும் பிராணியைத் தெரிவு செய்க.



i. ii. iii.

10. நுளம்பினால் பரவும் நோய் அல்லாதது எது?

i. டெங்குக் காய்ச்சல்
ii. நெருப்புக் காய்ச்சல்
iii. மலேரியாக் காய்ச்சல்

11. விற்றமின் A குறைபாட்டால் ஏற்படும் நோய் பின்வருவனவற்றுள் எதுவாகும்.

i. பெரிபெரி ii. ஸ்கேவி
iii. மாலைக்கண்


12. ஒரு சோடா போத்தலில் உள்ள குளிர்பானத்தை 5 பேருக்கு பகிர்ந்தளிக்க முடியுமெனின், 29 பேருக்குக் கொடுப்பதற்கு எத்தனை குளிர்பான போத்தல்கள் தேவை?

i. 6 ii. 7 iii. 5

13. 4 அப்பிள்களின் விலை ரூ. 60.00 எனின், 3 அப்பிள்களின் விலை யாது?

i. ரூபா. 30.00 ii. ரூபா. 60.00
iii. ரூபா. 45.00

14. உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்?




i. 2/6
ii. 5/6
iii. 4/6

15. 1736 இல் இலக்கம் 7 இன் பெறுமானம் யாது?

i. நூறுகள் ii. 70 iii. 700

16. கீழுள்ள சதுரத்தின் சுற்றளவைக் காண்க.



9 cm

i. 38 cm
ii. 36 cm
iii. 49 cm

17. Cool என்பது Looc எனின் Pool என்பது?

i. Polo ii. Lool
iii. Loop



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பொதுநூலகம்

18. 7, 9, 12, 16, ..... இவ்வெண்கோலத்தில் அடுத்து வர வேண்டிய இரு எண்களும் முறையே
i. 27, 21 ii. 20, 24 iii. 21, 27


19. இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ பார்க்கும்போது ஒரே கருத்தைத் தரும் சொல்?
i. DOT ii. LEVEL
iii. CABEL

20. 15 இவ்வெண்ணை உரோமன் இலக்கத்தில் எழுதுவதற்கு தேவையான ஈர்க்குகளின் எண்ணிக்கை?
i. 5 ii. 8 iii. 3

21. இலங்கையின் தேசியக் கொடியில் காணக் கிடைக்காத நிறம் எது?
i. பச்சை ii. மஞ்சள் iii. நீலம்

22. பின்வருவனவற்றுள் ஊனுண்ணி அல்லாதது எது?
i. கழுகு ii. பூனை
iii. சிங்கம்

23. என்னிடம் ரூபா 200 உம் எனது தம்பியிடம் ரூபா 100 வும் உள்ளன. நான் எவ்வளவு பணத்தினை தம்பிக்குக் கொடுத்தால் இவரிடமும் உள்ள பணம் சமனாகும்.
i. ரூபா. 25.00 ii. ரூபா. 100.00
iii. ரூபா. 50.00

24.  இது ஒரு
i. செங்கோணமாகும்
ii. விரிகோணமாகும்
iii. கூர்கோணமாகும்

25. A, B என்பவற்றுக்கு பொருத்தமான எண்கள் முறையே

| | | |
|---|---|---|
| 3 | A | 2 |
| 2 | 4 | B |
| 5 | 7 | 7 |


i. 4, 3 ii. 3, 5 iii. 5, 3

26. பலா வித்து, கௌபி, பாசிப்பயறு, மா வித்து, கடுகு என்பனவற்றை பருமன் அடிப்படையில் ஒழுங்குபடுத்தும் போது நடுவில் வருவது எது?
i. பலா வித்து ii. கௌபி
iii. மா வித்து


27. ஒரே நேரத்தில் அதிகமானோர் பயணம் செய்வதற்கு ஏற்ற வாகனம் எது?
i. பேருந்து ii. கார் iii. வேன்

28. புத்தகம் ஒன்றில் எப்போதும் இருப்பது எது?
i. எழுத்துகள் ii. பக்கங்கள்
iii. படங்கள்

29. மரம் ஒன்றில் அதிகம் இருப்பது எது?
i. பூக்கள் ii. பழங்கள்
iii. இலைகள்

30. 

i. 1 ii. 6 iii. 10

31. 

i. 35 ii. 30 iii. 17

**கீழுள்ள இந்து அராபிய இலக்கங்களுக்குப் பொருத்தமான உரோமன் இலக்கங்களைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.**

32. 16 i. xiiiv ii. xvi iii. xiv

33. 9 i. viiii ii. xi iii. ix

**இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

34. மான்கள் நீரைத் தேடிச் ...............
i. சென்றது ii. சென்றனர்
iii. சென்றன

35. விமலா படிப்பில் ஆர்வம் மிக்கவளாகக் ...............
i. காணப்பட்டது ii. காணப்பட்டார்கள்
iii. காணப்பட்டாள்

**முதலில் தரப்பட்ட சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க.**

36. மாந்தர் i. மிருகம் ii. மக்கள்
iii. வீடு

37. பார் i. காடு ii. மேடு
iii. உலகம்

**சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.**

38. i. பயிச்சி ii. பயிர்ச்சி
iii. பயிற்சி

44ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

**பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.**

சித்திரை பிறக்குது பார் தம்பி
சின்னக்குயில் கூவுது பார் தம்பி
சிகப்புப் பட்டாடை பார் தம்பி
சிரித்து மகிழ வா தம்பி

1. பாடலில் இடம் பெற்ற காலப் பெயர் ஒன்று?
2. பாடலில் வந்துள்ள உயர்திணை ஆண்பால் சொல்?
3. குயிலின் ஒலி மரபை ஒத்த இன்னுமொரு பறவை?
4. பாடலில் இடம்பெற்ற பெயரும் வினையு மான சொல்?
5. தம்பி என்பதற்கான எதிர்ப்பாற் கருத்து?

**சரியான தொகுதிக்கு கோடிடுக.**

6. i. பாவக்கா, பைத்தங்காய், போயிலை
   ii. பாகற்காய், பயிற்றங்காய், புகையிலை
   iii. பாகட்காய், பையற்றங்காய், போயிலை
7. i. வெந்நீர், பன்னீர், தேநீர்
   ii. வென்னீர், பண்ணீர், தேனீர்
   iii. வெண்நீர், பன்நீர், தேநீர்

**ஒரே கருத்தைத் தராத சொல்லின் கீழ் கோடிடுக.**

8. மாதா, பிதா, அன்னை, தாய்
9. விண், ஆகாயம், வான், இரவி
10. தாமரை, பூ, மலர், புஷ்பம்

**கட்டங்களை பூர்த்தி செய்க.**

11. உயிர் எழுத்துக்களின் தொகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

12. வரவு என்பதன் எதிர்க்கருத்து

| | | |
|---|---|---|
| | | |

13. ஔவையார் எழுதிய நூல்

| | | |
|---|---|---|
| | | |

**பிரித்து எழுதுக.**

14. மணியோசை = .........+.........
15. பனையோலை = .........+.........

**'எனது நன்றி உள்ள நாய்' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.**

1. ..................................................
2. ..................................................
3. ..................................................

**பின்வரும் ஆங்கில சொற்களுக்கான பொருத்தமான எழுத்தை எழுதுக.**

16. El......phant
17. Peac.......ck

**பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினை எழுதுக.**

18. Please go :..........................................
19. Catch it :..........................................

**சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.**

20. தாத்தா எனவா :..............................
21. மட சதுட்டுய் :..............................

**சரியான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

22. 7420 என்பதை சொற்களில் எழுதுக.
23. 640 குடைகளை 5 பேருக்கு சமனாகப் பகிர்ந்த போது
    1. ஒருவருக்கு கிடைக்கும் குடைகளின் எண்ணிக்கை
    2. மீதியாக இருக்கும் குடைகள் எத்தனை?
24. பின்வரும் எண்களை இறங்கு வரிசையில் எழுதுக. 137, 470, 216, 503
25. செவ்வகமொன்றின் ஒரு பக்க நீளம் 9 cm, அகலம் 6 cm எனின் அதன் சுற்றளவு யாது?
26. தரப்பட்ட உருவில் 1/2 ஐ நிழற்றுக.

| | | | |
|---|---|---|---|
| | | | |

27. வகுக்குக. 1. $\sqrt[4]{408}$ 2. $\sqrt[5]{540}$
28. அருகில் காட்டப்பட்டுள்ள இலக்க அட்டை நான்கையும் பயன்படுத்தி ஆக்கக் கூடிய

| | | | |
|---|---|---|---|
| 2 | 7 | 3 | 5 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மிகப் பெரிய எண் யாது?
2. மிகச் சிறிய எண் யாது?

29. 2 l 550 ml ஐ ml இல் தருக.

30. 3 kg 500 g சீனியை எத்தனை 500 g பைக்கற்றுகளில் அடைக்கலாம்?

31.



1. இவ்வுருவில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
2. இவ்வுருவில் உள்ள செங்கோணத்தை விட பெரிய கோணங்கள் எத்தனை?

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

32. சமயத்துடன் தொடர்புடைய மலை பின்வருவனவற்றுள் எது?
i. பீதுருதாலகால மலை
ii. சிவனொளிபாத மலை
iii. நக்கீல்ஸ் மலை
iv. கிரிகல் பொத்த

33. சமைக்கும்போது கீரை வகைகளின் போசணையினை பாதுகாக்க செய்ய வேண்டியது.
i. அதிக நேரம் சமைத்தல்
ii. வெட்டும் முன் கழுவுதல்
iii. கழுவாமல் சமைத்தல்
iv. மிக மெல்லியதாக வெட்டுதல்

34. தேசிய கொடியில் காணப்படும் அரச இலைகளின் எண்ணிக்கை
i. 01 ii. 03 iii. 04 iv. 05

35. பின்வருவனவற்றுள் ஓரிதழ் பூ
i. மல்லிகை ii. கடதாசிப்பூ
iii. தென்னம்பூ iv. அந்தூரியம்

36. தொலைந்த அடையாள அட்டை தொடர்பாக முறைப்பாடு செய்ய வேண்டிய இடம்?
i. பொலிஸ் நிலையம்
ii. கிராம சேவகர் காரியாலயம்
iii. நீதிமன்றம்
iv. வைத்தியசாலை

37. காதுகளால் மட்டும் தகவல்களை பெற்றுக் கொள்ளும் ஒரு சாதனம் எது?
i. தொலைக்காட்சி ii. வானொலி
iii. பத்திரிகை iv. இணையம்

38. சிவப்பு நிறக் கண்களை கொண்ட பறவை
i. காகம் ii. மைனா
iii. குயில் iv. கிளி

39. வருடத்தில் குறிப்பிட்ட காலத்தில் மட்டும் கிடைக்கக் கூடியது?
i. தேங்காய் ii. வாழைப்பழம்
iii. ரம்புட்டான் iv. அன்னாசி

40. நீரினால் பரவும் நோய் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
i. டெங்கு ii. மலேரியா
iii. நெருப்புக் காய்ச்சல்
iv. யானைக்கால் நோய்

41. பாதங்களைக் கொண்ட பிராணி அல்லாதது.
i. அட்டை ii. மட்டைத் தேள்
iii. சிங்கம் iv. சிலந்தி

42. விசர் நாய்க்கடியை ஏற்படுத்தும் பிராணி அல்லாதது.
i. நாய் ii. பூனை
iii. கரப்பான் பூச்சி iv. குரங்கு

43. இந்தியா அமைந்துள்ளது இலங்கைக்கு
i. வடக்கில் ii. தெற்கில்
iii. கிழக்கில் iv. மேற்கில்

44. கடலுக்கு அண்மையில் அமைந்துள்ள நகரம் அல்லாதது?
i. புத்தளம் ii. திருகோணமலை
iii. கண்டி iv. காலி

45. கண்ணுக்குப் புலப்படாத சிறிய நுண்ணுயிர்களைப் பார்ப்பதற்கு பயன்படுவது?
i. தொலைநோக்கி
ii. நுணுக்குக்காட்டி
iii. கைவில்லை
iv. முகம் பார்க்கும் கண்ணாடி

46. இலங்கையின் தேசிய விளையாட்டு
i. கிரிக்கட் ii. எல்லே
iii. கரப்பந்து iv. கிட்டிப்புள்

47. மஞ்சள் நிற மரக்கறிகள், பழங்களில் அதிகம் காணப்படுவது
i. விற்றமின் C ii. விற்றமின் B
iii. விற்றமின் K iv. விற்றமின் A

48. பின்வருவனவற்றுள் ஒரு நீர்வீழ்ச்சி எது?
i. வளவ கங்கை ii. துன்ஹிந்த
iii. கிரிந்தி ஓயா iv. மாணிக்க கங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. காகத்தின் கூட்டில் முட்டையிடும் பிராணி
i. ஆந்தை ii. வெளவால்
iii. குயில் iv. மைனா

50. பின்வருவனவற்றுள் உணவுக்குப் பயன்படும் பூ
i. மல்லிகை ii. அகத்தி
iii. முள்முருக்கு iv. நாகமலர்

51. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு பயன்படும் ஒரு பிராணி
i. பூனை ii. கிளி iii. நாய் iv. சிங்கம்

52. பின்வரும் தாவர இலைகளில் மிகப் பெரிய இலை
i. கத்தாப்பு ii. முருங்கை
iii. சேம்பு iv. கொடித்தோடை

53. பின்வருவனவற்றுள் நிலத்தில் படரும் கொடி
i. புடோல் ii. மல்லிகை
iii. வற்றாளை iv. வெள்ளரி

54. சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறங்களை கலப்பதால் கிடைக்கும் நிறம்
i. செம்மஞ்சள் ii. காவி
iii. ஊதா iv. பச்சை

55. கிரிக்கெட் விளையாட்டில் ஓர் அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை
i. *10* ii. *11* iii. *9* iv. *6*

56. சமைக்காது பச்சையாக உண்ணக் கூடியது
i. கத்தரி ii. பூசணி
iii. உருளைக்கிழங்கு
iv. கரட்

---

**விடைகள்**

1. சித்திரை
2. தம்பி
3. சேவல்
4. பார்
5. தங்கை
6. ii
7. i
8. பிதா
9. இரவி
10. தாமரை
11. 12
12. செலவு
13. மூதுரை
14. மணி+ஓசை
15. பனை+ஓலை
16. e
17. o
18. தயவு செய்து போ
19. அதைப் பிடி
20. அப்பா வருகிறார்
21. எனக்கு மகிழ்ச்சி
22. ஏழாயிரத்து நாநூற்று இருபது
23. i. 128 ii. 0
24. 503, 470, 216, 137
25. 30 cm
26.
27. i. 102 ii. 108
28. i. 7532 ii. 2357
29. 2,550 ml
30. 7
31. i. 0 ii. 2
32. ii
33. ii
34. iii
35. iv
36. i
37. ii
38. ii
39. iii
40. iii
41. i
42. iii
43. i
44. iii
45. ii
46. iii
47. i
48. ii
49. iii
50. ii
51. iii
52. i
53. ii
54. i
55. ii
56. iv

---

**41 ஆம் பக்கத் தொடர்...**

39. i. நாநூறு ii. நானூறு
iii. நான்னூறு

40. i. காப்புறுதி ii. காப்புருதி
iii. கார்ப்புறுதி

**விடைகள்**

1. iii
2. iii
3. iii
4. iii
5. iii
6. iii
7. ii
8. ii
9. ii
10. ii
11. iii
12. i
13. iii
14. iii
15. i
16. ii
17. iii
18. iii
19. ii
20. iii
21. iii
22. ii
23. iii
24. iii
25. ii
26. ii
27. i
28. ii
29. iii
30. i
31. ii
32. ii
33. iii
34. iii
35. iii
36. ii
37. iii
38. iii
39. i
40. i



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 17

பரிசில்களை பெறும் சித்திரங்கள்

## தலைப்பு: நீர் வளத்தைப் பாதுகாப்போம்




நுஹா சஜக்
கு/பறகஹதெனிய தே.பா.
மாவத்தகம




என். சமீஹா
அன் நஹார் பெண்கள் ம.ம.வி.
திருகோணமலை



ஆர்.ஏ. ரஸ்மாக்
க/தெஹு அல்மனார் தே.பா.
ஹந்தெஸ்ஸ


பாராட்டை பெறும் சித்திரங்கள்



டீ. ஹுதா
கு/பறகஹதெனிய தே.பா.



எம்.ஏ. ஆதில்
சாதுலியா பாடசாலை
செம்மண்ணொடை - 07



பாத்திமா அய்யூப்கான்
கு/அன்னூர் ம.க.
பாணகமுவ




ஏ.எப். சம்ஹா
மன்/மகளிர் ம.வி.
எருக்கலம்பிட்டி



எம்.எஸ். ஷஹாமா
மதீனா தே.பா.
சியம்பலாகஸ்கொடுவ




எம்.ஆர்.எப். அம்ரா
க/பாத்திமா பாலிகா




எம்.எஸ். அம்ஜத்
கு/பறகஹதெனிய தே.பா.



எம்.என். ஷிபான்
வெலம்பொட மு.ம.வி.



ஸைனப் நிஸ்தார்
க/அந்நூர் ஆரம்ப பா.
ஹந்தெஸ்ஸ



என். நுஸ்ரி அஹமட்
நிக/அபுக்காகம மு.ம.வி.
மொனேக்குளம்



நஸீர் ரிப்னி



அஸ்கா ஜவாஹிர்
நைதல் நகர்
மூதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Auto CAD
Designing and Drafting

E-TEC campus
KNOWLEDGE FOR LIFE



TVEC Approved

## Auto CAD MEP

Individual & Crash course Available

Auto CAD MEP Drafting ↑ Advanced Dip. in Auto Cad ↑ Dip. in Auto CAD - 2D&3D ↑ GCE O/L, A/L

Auto CAD MEP QS ↑ QS Students ↑ GCE O/L, A/L

### Why CAD & MEP @ E-TEC CAMPUS
- The course is conducted by well qualified lecturers
- Comprehensive syllabus
- Free Job Training(to work in local & Abroad)
- TVEC Approved Certificates For Cad & MEP
- Practical Training to ensure ready employment At (Saudi, Qatar, Oman, Dubai)

03 Months Weekdays / Weekends

## E-TEC CAMPUS KANDY
493, Peradeniya Road, Kandy. 0812 22 52 55 / 077 22 22 569

# Other Courses...

### COMPUTER COURSES
Ms Office
Graphic Designing
Web Designing
Computer Hardware
Web Development
3D Max

### TECHNICAL COURSES
CCTV Configuration
Advanced Mobile Phone Repairing

### ACCOUNTING & MANAGEMENT
Computerized Accounting
Accounting Information Systems
Business Management

### ISLAMIC BANKING
Islamic Banking & Finance
Executive Diploma CISI-UK
PGD in Islamic insurance IIBI-UK

### TEACHER TRAINING
Teacher Training-AMI
Early Child Hood Development
Elocution Teachers Diploma

### Strategic Partners .......
CISI, ICVE, Microsoft, Microsoft Imagine Academy, Cisco Networking Academy, fusion education, Exam Centre, first global, TVEC, IIBI

# Access Program
## Pre-Degree Course

Earn 5 Qualifications

தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆங்கில விருத்திக்குமான பாடநெறி

fusion

**Diploma in Computer Application**
Managing Files
Ms Office 2013
Internet email

**Diploma in Graphic Designing**
Adobe Photoshop
Corel Draw
Adobe Illustrator

**Diploma in Hardware Engineering**
PC Dissembling & Assembling
Installing - Software/ Drivers
PC Repairing & Trouble Shooting

**Diploma in Web Designing**
Adobe Dream Weaver
Adobe Flash, HTML
Adobe Photoshop

**03 Months (Full Time)**
Monday - Friday
8.30 am - 4.00 pm

**Diploma in Spoken English**
Reading Writing
Listening, Speaking
Grammar, Vocabulary

### Why E-Tec Campus
Modern Fully Air Conditioned Computer Labs
Latest Software Used For Teaching
Well Qualified Experienced Lecturers
Best Curriculum For IT & English
Course Materiels Provided
Fusion DICA Hand Book Provided



TVEC Approved 4 Certificates
ICVE Indian iso Certified Certificate
Fusion Gov Approved Certificate


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org